வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 26.10.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 325 | பக்கங்கள் : 16

# 30 அரச நிறுவனங்களின் தலைவர்கள் நீக்கப்படுவர்!

## ஜனாதிபதி கோட்டாபய நடவடிக்கை



**கொழும்பு, ஒக்ரோபர் 26**
**முப்பது அரச நிறுவனங்களின் தலைவர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துள்ளார் என்று பிரபல ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம், இலங்கை தர நிர்ணய நிறுவனம், அரச ஊடக நிறுவனம் என்பவை உட்பட 30 நிறுவனங்களின் தலைவர்களே இவ்வாறு பதவிகளில் இருந்து நீக்கப்பட்டு, புதியவர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

எனினும், இந்தத் திடீர் நடவடிக்கைக்கான காரணம் குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. (ஐ)

## 2022 முதல் டிஜிற்றல் அ. அட்டை

கொழும்பு, ஒக். 26
உலகிலேயே அதியுயர் தொழில்நுட்பம் வாய்ந்த டிஜிற்றல் தேசிய அடையாள அட்டையை அடுத்த வருடத்தின் முதல் காலாண்டுக்குள் அறிமுகப்படுத்தத் தயார் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், அபிவிருத்திக் கூட்டிணைப்பு மற்றும் கண் காணிப்பு அமைச்சர் மற்றும் டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலகைக் கையாள்வதில் இலங்கை நவீனமயமாக்க வேண்டிய நேரம் வந்து விட்டது என்று அமைச்சர் குறிப்பிட்டார். 15

## சடுதியாக அதிகரித்தன கொரோனா மரணங்கள்

### இறுதியாக 29 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 26
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 29 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு மரணமடைந்தவர்களில் 12 ஆண்களும், 17 15

## அதானி குழுமத்தினர் மன்னாருக்கு வருகை!

மன்னார், ஒக். 26
இந்தியாவின் கோடீஸ்வரரான கௌதம் அதானியும் அவரின் குடும்ப உறுப்பினர்களும் நேற்று திங்கட்கிழமை மன்னாருக்கு வந்தனர்.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை பெற்றுள்ள அதானி குழுமத்தின் தலைவரான கௌதம் அதானியும், கொழும்பு முனையத் திட்டத்தின் தலைமை நிர்வாகியான அவரின் புதல்வரும் நேற்று இலங்கை வந்தனர்.

இரு தனி விமானங்களில் இலங்கை வந்த 15



## நாடளாவிய ரீதியில் நேற்று ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 26
கடந்த 24 வருடங்களுக்கு மேலாக எதிர்கொண்டு வரும் சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கோரி அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதிபர், ஆசிரியர்கள் பல்வேறு போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று திங்கட்கிழமை வழமையாக பணிக்குச் சென்ற ஆசிரியர்கள் பிற்பகல் 02 மணியுடன் பாடசாலை நேரம் முடிந்த பின் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் தமது சம்பள முரண்பாட்டை தீர்க்கு மாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்து 15

## அருட்தந்தை மீது முறைப்பாடு!

கொழும்பு, ஒக். 26
அருட்தந்தை சிறில் காமினிக்கு எதிராக அரச புலனாய்வு பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே குற்ற புலனாய்வு (சி. ஐ. டி.) திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் அருட்தந்தை சிறில் காமினி தரப்பினரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை. தாம் எந்த நிலைமையிலும் ஒருபோதும் சஹ்ரான் ஹாசிம் அல்லது அவருடைய வழியை பின்பற்றியவர்களுடன் 15

## வடக்கு மாகாணத்தில்:

## 55% மாணவர், 84% ஆசிரியர் பாடசாலைகளுக்கு வருகை!

யாழ்ப்பாணம், ஒக். 26
வடக்கில் நேற்று, 55 சதவீத மாணவர்களும், 84 சதவீத ஆசிரியர்களும், 97 சதவீத அதிபர்களும் பாடசாலைகளுக்கு சமுகமளித்தனர் என்று மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் நேற்று அனைத்து ஆரம்ப பாடசாலைகளும் ஆரம்பமாகின. இதன்படி, வடக்கு மாகாணத்தில் 906 பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன.

இதில், 882 பாடசாலைகளின் அதிபர்கள் நேற்று பாடசாலைகளுக்கு வருகை தந்தனர். இதே போன்று, 7 ஆயிரத்து 48 ஆசிரியர்களின் வருகையை எதிர்பார்த்த போதும் 5 ஆயிரத்து 965 ஆசிரியர்கள் சமுகமளித்தனர் என்று கூறப்படுகின்றது.

88 ஆயிரத்து 702 மாணவர்களில் 49 ஆயிரத்து 418 மாணவர்களின் 15

## இரவு நேர பயண தடை நீக்கம்!

கொழும்பு, ஒக். 26
கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் நாடு தழுவியதாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இரவு நேர பயணத் தடை நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் இரவு 11.00 மணி முதல் அதிகாலை 04.00 மணி வரை போக்குவரத்து தடை அமுலில் இருந்து வந்தது.

இந்நிலையில் நேற்று நள்ளிரவு முதல் இந்த தடை நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## திருமண நிகழ்வுகளுக்கான கட்டுப்பாடுகளில் மாற்றம்

கொழும்பு, ஒக். 26
கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக திருமணங்கள் உள்ளிட்ட நிகழ்வுகள் மற்றும் பல நடவடிக்கைகளுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் புதிய சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, உட்புற திருமணங்களில் 100 விருந்தினர்களையும், வெளிப்புற திருமணங்களில் அதிகபட்சமாக 150 விருந்தினர்களையும் அனுமதிக்க முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஒப்புதல் அளித்துள்ளார்.

எனினும், திருமண நிகழ்வுகளில் மதுபானம் வழங்க அனுமதிக்கப்படாது.

இதற்கிடையில், உணவகங்களில், ஒரே 15

## வடக்கில் நேற்று 14 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஒக். 26
யாழ்ப்பாணத்தில் 08 தொற்றாளர்கள் உட்பட வடக்கு மாகாணத்தில் 14 தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையிலேயே புதிய தொற்றாளர்கள் இனங்காணப் 15



# எதிர்வரும் நாள்களில் பெரும் போராட்டங்கள்

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக்.26

**அதிபர் , ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கும் அதேவேளை புதிய முறைமையில் இனி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம். சகல மாணவர்களுக்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்-

அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்கள் என்ற ரீதியில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மாத்திரமே பாடசாலை சென்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாத்திரமே கல்விச் செயல்பாடுகளில் ஈடுபடுவர். அதனை தவிர்த்து வேறு எந்த கல்வி சார் செயல்பாடுகளிலும் ஈடுபடப் போவதில்லை.

வெவ்வேறு பிரதேசங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு பாடசாலை செல்வதற்கான சூழல் இல்லை. காரணம் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து செயல்பாடுகள் ஆரம்பிக்கப்படாமையாகும்.

எனவே, அரசாங்கம் மாகாணங்களுக்கிடையில் பாடசாலை செல்லும் ஆசிரியர்களுக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கும் அதே வேளை புதிய முறைமையில் இனி தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

சகல மாணவர்களுக்கும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்-என்றார். (அ)

# திரவ நைதரசன் உர இறக்குமதி தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, ஒக். 26

இந்தியாவிலிருந்து திரவ உர இறக்குமதியின்போது, தனியார் நிறுவனமொன்றுக்கு பணம் செலுத்திய விடயம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்ற விசாரணை திணைக்களத்தில் நேற்று முறைப்பாடொன்றை பதிவு செய்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் விரிவான விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரான ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

இந்த ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது பாரபட்சம் பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஜே. சி. அலவத்துவல மற்றும் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாரா ளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளது.



# பளை கல்விக்கோட்டம் முன்பாக ஆசிரியர்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 26

பளை கல்விக் கோட்ட அலுவலகம் முன்பாக ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இந்த போராட்டம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் ஆசிரியர் போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் கிளிநொச்சியிலும் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)




# வடமராட்சி ஆசிரியர்கள் நேற்று கண்டன போராட்டம்

வடமராட்சி, ஒக். 26

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குதல் உள்ளிட்ட ஆறு அம்ச கோரிக்கையை முன் வைத்து வடமராட்சி பாடசாலைகளை சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து உடுப்பிட்டி சந்தியில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல், உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் உட்பட பல தொழில் சங்கங்களை சேர்ந்தவர்கள் இணைந்து கொண்டனர். (ஐ - 02)

# ரஷ்யா புறப்பட்டார் சவேந்திர சில்வா

கொழும்பு, ஒக். 26

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா எட்டு நாள் நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு ரஷ்யா சென்றுள்ளார்.

ரஷ்யாவின் இராணுவத் தளபதி ஜெனரல் ஒலெக் சல்யுவோவ்வின் அழைப்பின் பேரில் அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் ஜெனரல் சாவேந்திர சில்வாவை வரவேற்றனர்.

ரஷ்யாவின் முக்கிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஜெனரல் சவேந்திர சில்வா பேச்சு நடத்த உள்ளார்.

ரஷ்ய இராணுவ அருங்காட்சியகம் உள்ளிட்ட பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு ஜெனரல் சவேந்திர சில்வா விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### கல்வி TV CHANNEL-1

26.10.2021
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

### கல்வி TV CHANNEL - 2

26.10.2021
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
26.10.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## அரசாங்கத்தின் வீழ்ச்சி!

அரசாங்கம் தொடர்பில் ஆரம்பத்தில் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புக் காணப்பட்டது. ஆனால், கழுதை தேய்ந்து கட்டெறும்பானது என்பதுபோல் – அரசாங்கமோ தற்போது, தொடர்ந்தும் நெருக்கடிகளையே சந்தித்து வருகின்றது. நாட்டில் எங்கு பார்த்தாலும் எதிர்ப்பு போராட் டங்கள். ஆசிரியர்களின் போராட்டம் – விவசாயிகளின் போராட்டம் – மீனவர்களின் போராட்டம் என தொடர்ந்தும் எதிர்ப்புக்களையே அரசாங்கம் எதிர்கொண்டு வருகின்றது. இவற்றுக்கெல்லாம் பொருளாதார நெருக்கடிதான் காரணம் என்று கூறுவோர் உண்டு. ஆனால், அது மட்டும்தானா காரணம்?

நெருக்கடி நிலையை முகாமை செய்வதற்கான சிறந்த திட்டங்கள் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. பல பிரச்னைகள் இங்கிருந்துதான் ஆரம்பிக்கின்றன. முக்கிய தீர்மானங்கள் அனைத்தும் ராஜபக்ஷக்கள் மத்தியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதுவே பல்வேறு பிரச்னைகளுக்கான காரணமாகக் கூறப்படுகின்றது.

அரசாங்கம் தங்களின் கருத்துக்களைக் கேட்கவில்லை – இதன் காரணமாகவே இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருப்பதாக மைத்திரிபால சிறிசேன கூறிகின்றார். குறிப்பாக, பஸில் ராஜபக்ஷவின் அரசியல் பிரவேசத்திற்கு பின்னர் உள் முரண்பாடுகள் அதிகரித்திருப்பதான தோற்றமே தெரிகின்றது. பொதுஜன பெரமுன வட்டாரத்தில் பஸிலை ஒரு மீட்பர் போன்று நோக்கினர். ஆனால், பங்காளிகளோ – அவரை வில்லனாகப் பார்க்கின்றனர். பொதுஜன பெரமுனவை பொறுத்தவரையில் ஏனைய சிறிய கட்சிகளை ஏளனமாகப் பார்க்கும் போக்கே மேலோங்கியிருக்கின்றது. உள்முரண்பாடுகள் தீவிரமடைந்து செல்வதற்கு இதுவும் ஒரு முக்கியமான காரணம்.

இன்று போராட்டங்களில் ஈடுபடும் மக்கள் எவருமே தூண்டுதல்களின் பெயரில் செயல்படவில்லை. அரசாங்கம் பிரச்னைகளை சரியான முறையில் கையாளாத காரணத்தால்தான், மக்கள் வீதிக்கு வரும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டும் என்னும் எண்ணம் தவறானதல்ல. ஆனால், அந்த முயற்சியில் ஒரு கட்டம் வரையில், வளர்ச்சியடைந்த பின்னர்தான் உரத்தை தடைசெய்யும் முடிவை எடுத்திருக்க வேண்டும். அதேவேளை இயற்கை விவசாயத்தை மட்டும் முன்னெடுப்பதற்கான நிலைமை இலங்கையில் இருக்கின்றதா என்னும் கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இது தொடர்பில் சுயாதீன நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டிருந்தால் சிலவேளைகளில் நிலைமைகள் வேறு விதமாகவும் அமைந்திருக்கலாம். இலங்கையிலுள்ள அடிப்படையான பிரச்னை – அரசியல்வாதிகள் அனைத்தும் தெரிந்தவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாக நிபுணர்களின் கருத்துக்களுக்கு மதிப்பில்லாமல் போய்விடுகின்றது.

2019இல் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றவேளையில் அரசாங்கம் தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பை வெளியிட்டவர்களோ, இப்போது அதிருப்திகளை வெளியிட்டு வருகின்றனர். குறிப்பாக அரசாங்கத்தின் தீவிர ஆதரவாளர்களான, முன்னணி பௌத்த பிக்குகள் அரசாங்கத்தை தொடர்ந்தும் விமர்சித்து வருகின்றனர். இவற்றை ராஜபக்ஷக்கள் எவ்வாறு சமாளிக்கப் போகின்றனர்?

இலங்கை அரசியலில் நெருக்கடிகளைக் கையாளுவதற்கு ஒரு பாரம்பரியமான முறைமையும் உண்டு. அரசியல், சமூக, பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க முடியாமல் தடுமாறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், அந்த பாரம்பரிய முறைமையையே சிங்கள தலைவர்கள் கையிலெடுப்பதுண்டு. அதாவது, ஒரு போலியான தேச பக்தி. எல்லோரையும் விடவும் தாங்களே சிங்கள – பௌத்த தேசியத்தை பாதுகாக்க வல்லவர்கள். எங்களை விட்டால் வேறு எவராலும் அதனை செய்ய முடியாது. இதுதான் அந்த பாரம்பரிய தற்காப்பு அரசியல் முறைமை. வரலாறு நெடுகிலும் தென்னிலங்கையின் தலைவர்கள் இப்படியான கணக்கை கூட்டிக் கழித்து அரசியல் செய்து வந்திருக்கின்றனர்.

# கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு துணை நிற்கும் பரிசுத்த பாப்பரசர்!

- அலசுவது இராஜதந்திரி -



*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நீதி விசாரணைகள் குறித்து இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான அதிவண. பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றார். வெறுமனே ஓர் ஆணைக்குழு விசாரணையை மட்டும் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பாக நடத்தி விட்டு ஒழுங்கான நீதி விசாரணை எதுவுமின்றி ‘முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கும்’ முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது என்ற தோரணையில் கர்தினால் மல்கம் ரஞ்சித் தமது மன ஆதங்கத்தை உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் தொடர்பான அறிக்கை வெளியான நாள் முதல் தெரிவித்து வருகின்றார்.*

*2009ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் கொழும்பு மாநகரம் குண்டு வெடிப்புகளால் அடிக்கடி அதிர்வதை வழக்கமாக கொண்டிருந்தது. கொழும்பில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் இலங்கை மத்திய வங்கிமீது லொறியொன்றில் வந்த தற்கொலைக் குண்டுதாரிகளால் நடத்தப்பட்ட தாக்குதலே மிக மோசமானதாக இருந்தது. 1996ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் சுமார் 70 பேர் வரை கொல்லப்பட்டனர். ஆனால், 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற தாக்குதல்களை எல்லாம் ஓரம் தள்ளி விடுமளவுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஒரேநாளில் கொழும்பு கொச்சிக்கடை தேவாலயம் , நீர்கொழும்பு தேவாலயம் மற்றும் மட்டக்களப்பு தேவாலயம் என்பவற்றில் இடம்பெற்றிருந்தன.*

*பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்து வரும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பந்தப்பட்ட கருத்துக்களை நோக்கும் போது அத்தாக்குதல்களின் சூத்திரதாரிகள் அறியப்பட்டுள்ள போதிலும் அவர்களை சட்டத்துக்கு முன்பாக நிறுத்துவதில் ஒளிவு-மறைவான போக்கு காணப்படுவதையே அவதானிக்க முடிகின்றது.*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல் என்பது தலைநகரில் ஒரு மிகப் புனிதமான தினத்தில் நடத்தப்பட்ட தாக்குதலாகும். அத்துடன், கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய மூன்று இடங்களிலும் ஒரேதினத்தில் மொத்தம் 300 பேர் கொல்லப்பட்டனர். எண்ணிலடங்காதோர் காயமடைந்தனர்.*

*வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்று பத்து வருட காலத்தில் இடம்பெற்ற மோசமான உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இலங்கையில் பாதுகாப்பான சூழல் என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருக்கின்றது என்பதையும், எப்போதும் - எத்தருணத்திலும் - எங்கேயும் மோசமான சம்பவங்கள் இடம்பெறலாம் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தன.*

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான நீதி விசாரணை வேண்டி இதுவரை எண்ணிலடங்காத கோரிக்கைகள் பல தரப்பட்டவர்களாலும் விடுக்கப்பட்ட வண்ணம் இருக்கின்றன. இவை யாவற்றிலும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இடையறாது விடுத்து வரும் நீதி விசாரணைக்கான கோரிக்கையே இடையறாது ஒலித்து வருகின்றது.*

*தமது கோரிக்கையின் உச்சக்கட்டமாக நீதி விசாரணை வேண்டி சர்வதேச சமூகத்தை நாடப்போவதாக கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித்திருந்தார். அந்தக் கோரிக்கைக்கு சாதகமான பதிலளிப்பதுபோலவே உலக கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான கர்தினால் மல்கம் ரஞ்சித் உயிர்த்த ஞாயிறு குறித்து நீதி விசாரணை தொடர்பாக விடுத்து வரும் கோரிக்கைகளுக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளார்.*

*மிக அவதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் எவ்வித அரசியல் ரீதியான கண்ணோட்டங்களுக்கும் இடம்தராத நிலையில் பரிசுத்த பாப்பரசரின் கடிதம் கர்தினால் மல்கம் ரஞ்சித்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.*

*கர்தினால் ரஞ்சித் ஐரோப்பாவிலுள்ள கத்தோலிக்க இலங்கையர்களுடனும், கத்தோலிக்க திருச்சபையுடனும் காணொலி மூலமாக நேற்று முன்தினம் நடத்திய உரையாடல் ஒன்றின்போதே பரிசுத்த பாப்பரசர் தமக்கு வழங்கியுள்ள ஆதரவு குறித்து கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்திருந்தார்.*

*பாப்பரசர் ஓர் ஆன்மீக தலைவர் மட்டுமல்ல. அவர் வதிகின்ற வத்திக்கான் ஒரு தேசமாகவும் இருக்கின்ற நிலையில் பரிசுத்த பாப்பரசர் ஒரு தேசத் தலைவராகவும் இருக்கின்றார். இந்த நிலையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து, ஒரு முக்கிய சர்வதேச பிரமுகராகவும் இருக்கின்ற பரிசுத்த பாப்பரசரின் கரிசனை, அந்த மோசமான தாக்குதல்கள் குறித்து நீதி வேண்டி சர்வதேச சமூகமும் விழிப்படைய ஆரம்பித்துள்ளமையையே சுட்டிக்காட்டுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
எதிர்பாராத நிகழ்வு தந்த மகிழ்ச்சியால் திணறுவீர்கள். உறவினர்கள் ஒட்டுதலாய் இருப்பர். சுறுசுறுப்பான நாள். பழைய பகையை மறப்பது நன்று. மகிழ்ச்சி தரும் செய்தி வரும்.

**இடபம்**
பங்குச் சந்தை போன்றவற்றில் புதிய முதலீடு செய்வீர்கள். மற்றவர்கள் மீது கருணை ஏற்பட்டு நன்மை செய்வீர்கள். கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் தீரும்.

**மிதுனம்**
கடன் பாக்கிகளை அதிகம் முயன்று வசூலிப்பீர்கள். முன்பு செய்த முதலீட்டால் மிக நல்ல லாபம் வரும். முயற்சியால் முன்னேறும் நாள். பணிச்சுமை கூடும்.

**கடகம்**
திடீரென்று தடைகள் விலகி வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். பணியாளர்களின் கனவு நனவாகும். பொழுதுபோக்கு அதிகமாகும். நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிப்பீர்கள்.

**சிம்மம்**
முயற்சியில் தடை, தாமதம் ஏற்பட்டாலும் வெற்றிகரமாக முடியும். யாருக்கும் பணியில் சேர நீங்கள் சிபாரிசு செய்ய வேண்டாம். உறவினர், நண்பர்களால் செலவுகள் ஏற்படலாம்.

**கன்னி**
பணியில் எதிர்பார்த்த நன்மைகள் அனைத்தும் கிடைக்கும். உங்களை பற்றிய விமர்சனங்கள் குறித்துக் கவலைப்பட வேண்டாம். சந்தோஷ காரணத்துக்காக அலைச்சல் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
நண்பர்களின் ஒத்துழைப்பால் நன்மை அடைவீர்கள். உங்களது பேச்சில் கவர்ச்சி அம்சம் கூடும். முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.தகுதிக்கேற்ற பதவி உயர்வை அடைவீர்கள்.

**விருட்சிகம்**
உறவினர் மூலம் எதிர்பார்த்த உதவி தாமதமின்றி கிடைக்கும். மற்றவர்ளை திருப்தி செய்ய யாரையும் தாக்கிப் பேச வேண்டாம். எதிரிகளை எளிதாக வெல்வீர்கள். திடீர் செலவு உண்டாகும்.

**தனுசு**
அலுவலகத்தில் ஆரோக்கியமான விவாதங்களில் உங்களின் அறிவாற்றல் வெளிப்படும். பிரச்னைகள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி. பயப்பட வேண்டிய விஷயங்களுக்கு மட்டும் பயப்படுங்கள்.

**மகரம்**
சுபநிகழ்ச்சிகள் செய்யும் முயற்சி ஒன்றில் வெற்றி கிட்டும். அலுவலகத்தில் இருந்து மகிழ்ச்சி அளிக்கும் செய்தி வந்து சேரும். நீங்கள் மதிக்கும் நபர்களிடம் இருந்து உதவி கிடைக்கும்.

**கும்பம்**
ஆன்மிக ஈடுபாடு அதிகரிக்கும். மகிழ்ச்சி கூடும். முன்கோபத்தை தவிருங்கள். பேச்சில் நிதானம் தேவை. அலுவலகத்தில் சாதாரணப் பேச்சை சண்டையாக்காதீர்கள்.

**மீனம்**
பணியாளர்களுக்கு மகிழ்ச்சி கூடும். உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும். யாரையும் நம்பி உங்கள் மனக்குறையைச் சொல்ல வேண்டாம். சகோதர, சகோதரிகளுக்கு நன்மை ஏற்படும். மனஅமைதி கூடும்.

# சசிலாவை அ.தி.மு.கவில் சேர்ப்பது குறித்து தலைமை நிர்வாகிகள் முடிவு எடுப்பார்கள்

## பன்னீர்செல்வம் சொல்கிறார்




சென்னை, ஒக். 26

சசிலாவை அ.தி.மு.க.வில் சேர்ப்பது குறித்து தலைமை கழக நிர்வாகிகள் ஆலோசித்து முடிவு எடுப்பார்கள் என அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பன்னீர் செல்வம் செய்தியாளர்கள் சந்திப்பில் நேற்று மேலும் கூறியதாவது:-

“அ.தி.மு.க. அரசின் நல திட்டங்களை தி.மு.க. முடக்கினால் மக்களை திரட்டி போராடுவோம். அரசியல் காழ்ப்புணர்ச்சியால் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்களின் வீடுகளில் சோதனை நடத்தப் படுகிறது.

சசிகலாவை அதிமுகவில் இணைப்பது குறித்து தலைமை கழக நிர்வாகிகள் ஆலோசித்து முடிவு எடுப்பார்கள். அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம், ஏற்றுக்கொள்வது என்பது மக்களின் விருப்பம். ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற அடிப்படையிலேயே அ.தி.மு.க. செயல்பட்டு வருகிறது” என்றார்.

அ.தி.மு.கவில் சசிகலாவுக்கு இடமில்லை என எடப்பாடி பழனிசாமி, ஜெயக்குமார் கூறி வரும் நிலையில் ஓ.பன்னீர் செல்வத்தின் மாறுபட்ட கருத்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. “கரம் கோர்ப்போம், பகை வெல்வோம்” என்று அண்மையில் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு சசிகலா கடிதம் எழுதியது குறிப்பிடத்தக்கது.

# தே.மு.தி.கவுக்கு எதிர்காலமே இல்லை என யார் நினைத்தாலும் அது தவறு!

## அதனை அழிக்க முடியாது என்கிறார் விஜயகாந்த்



சென்னை, ஒக். 26

“எனது உடல்நிலையில் சற்று தொய்வு ஏற்பட்டிருப்பது உண்மைதான். அதற்காக தே.மு.தி.கவுக்கு எதிர்காலமே இல்லை என யார் நினைத்தாலும் அது தவறான எண்ணம். 100 ஆண்டுகள் ஆனாலும் தே.மு.தி.கவை யாராலும் அழிக்க முடியாது” என அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

“தமிழகத்தில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து, தமிழகத்துக்கும், தமிழக மக்களுக்கும் நல்லது செய்ய வேண்டும் என்ற ஒரே உயர்ந்த நோக்கத்தோடும், லட்சியத்தோடும் ஆரம்பிக்கப்பட்ட கழகம் தேமுதிக என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

எந்த சுயநலமும் இல்லாமல், மக்கள் நலன் கருதி, நம்முடைய கழகம் ரசிகர் மன்றமாக இருந்து, பின்னாளில் கழகமாக உருவாகுவதற்கும், எனக்கு உறுதுணையாக இருந்தவர்கள் நீங்கள்தான்.

எனது உடல்நிலையில் சற்று தொய்வு ஏற்பட்டிருப்பது உண்மைதான். அதற்காக தே.மு.தி.கவுக்கு எதிர்காலமே இல்லை என யார் நினைத்தாலும் அது தவறான எண்ணம். 100 ஆண்டுகள் ஆனாலும் தே.மு.தி.கவை யாராலும் அழிக்க முடியாது.

தே.மு.தி.க. நிச்சயம் தமிழகத்தில் வேரூன்றி இருக்கும். தேமுதிக வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்வதற்கு தொண்டர்கள் அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும். தே.மு.தி.கவின் மீது அவதூறு பரப்புபவர்களின் வார்த்தை களை தொண்டர்கள் யாரும் நம்ப வேண்டாம் - என்றுள்ளது.

# தாதா சாகேப் பால்கே விருதை எனது குருவுக்கே சமர்ப்பிக்கிறேன்

## ரஜினிகாந்த் தெரிவிப்பு



புதுடில்லி, ஒக். 26

இந்திய திரைப்பட விருதுகளில் மிக உயரிய விருதான ‘தாதா சாகேப் பால்கே’ விருது நடிகர் ரஜினிகாந்திற்கு நேற்று புதுடில்லியில் வழங்கப்பட்டது.

இந்திய சினிமா வரலாற்றில் மிக உயரிய விருதாக ‘தாதா சாகேப் பால்கே’ விருது கருதப் படுகிறது. இந்திய சினிமாவின் தந்தையான தாதா சாகேப் பால்கே பெயரிலான இந்த விருது, திரைப்படத்துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தவர்களுக்காக ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. பிரபல நடிகர் சிவாஜிகணேசன், அமிதாப்பச்சன் உள்ளிட்டோர் இந்த விருதை பெற்றிருக்கிறார்கள்.

இந்த வரிசையில் 2019-ம் ஆண்டுக்கான விருது நடிகர் ரஜினிகாந்துக்கு அறிவிக்கப்பட்டது. சிவாஜிகணேசனுக்கு பிறகு தமிழ் திரைப்படத் துறையில் இந்த விருதை ரஜினிகாந்த் பெறுகிறார். கொரோனா நோய் பரவல் காரணமாக இந்த விருதை அவருக்கு வழங்க முடியாத நிலை இருந்தது.

இந்த நிலையில் நேற்று டில்லியில் நடைபெற்ற விழாவில் ரஜினிகாந்துக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டது. அவருக்கு இந்த விருதினை துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு வழங்கினார். விருதை பெற்றுக் கொண்ட நடிகர் ரஜினிகாந்த் பேசுகையில், “விருது வழங்கிய மத்திய அரசுக்கு நன்றி. தாதா சாகேப் பால்கே விருதை எனது குருவான கே.பாலச்சந்தருக்கு சமர்பிக்கிறேன். என்னை அடையாளம் காட்டிய நண்பர் பகதூர், அண்ணன் சத்யநாராயணாவுக்கு நன்றி... என்னை வாழ வைத்த தெய்வங்களான தமிழக மக்களுக்கு நன்றி..... இந்த விருதுக்கு காரணம் தமிழக மக்கள்தான்” என்று அவர் தெரிவித்தார்.



# கல்கிசை கடற்கரையில் குவியும் மக்களால் ஆபத்து

கொழும்பு, ஒக். 26
கோவிட் வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக நீண்ட பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ள நிலையில் மாலை நேரங்களில் கல்கிசை கடற்கரையில் பெருமளவு மக்கள் குவிந்து வருகின்றனர். அவர்களில் பலர் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி செயற்படுவதாக தெரியவந்துள்ளது.

குறித்த மக்களில் அதிகமானோர் முகக் கவசம் அணியாமல் ஒரு மீற்றர் இடைவெளியை பின்பற்றாமல் கடற்கரையில் நேரம் செலவிடுவதை காண முடிகிறது.

கல்கிசை கடற்கரையில் அதிகமாக வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் காணப்படும் நிலையில் இந்த காலப்பகுதியில் அதிகமாக உள்நாட்டுப் பயணிகளே காணப்படுவதாக கூறப்பட்டது.

சுகாதார விதிமுறைகளை மீறி செயற்படும் சுற்றுலாப் பயணிகளால் மற்றுமொரு கோவிட் அலை உருவாகும் அபாயம் உள்ளதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# அதிரடிக்கு தயாராகும் பங்காளி கட்சிகள்!

கொழும்பு, ஒக். 26

**கெரவலப்பிட்டி 'யுகதனவி' மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள அரச பங்காளிக்கட்சிகள், இது விடயம் தொடர்பில் மக்களை ஓரணியில் திரட்டவும் திட்டமிட்டுள்ளன.**

இதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி 'மக்கள் சபை' எனும் தொனிப்பொருளின்கீழ் பகிரங்க கூட்டமொன்றை நடத்துவதற்கு மொட்டு அரசுக்கு ஆதரவு வழங்கும் 10 பங்காளிக்கட்சிகள் தயாராகி வருகின்றன.

யுகதனவி விவகாரம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரம் வழங்குமாறு ஜனாதிபதியிடம், பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை விடுத்திருந்தாலும், அதனை ஜனாதிபதி நிராகரித்தார். பிரதமர் மற்றும் நிதி அமைச்சருடன் இது சம்பந்தமாக பேச்சு நடத்துமாறும் அறிவுறுத்தியிருந்தார்.



இவ்வாறானதொரு பின்புலத்திலேயே மக்கள் மத்திக்கு செல்வதற்கு பங்காளிகள் வியூகம் வகுத்துள்ளன. (அ)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் வாகன அனுமதிப்பத்திரம்

கொழும்பு, ஒக். 26
பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் சுங்க வரியின்றி வாகனங்களை இறக்குமதிசெய்யும் அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் வைத்து பிரதமர் இந்த விடயத்தை கூறினார்.

தான் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் இல்லை என ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி கூட்டத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட பிரதமர், பொருளாதார நெருக்கடி காணப்படும் சந்தர்ப்பத்தில் தமக்கு வாகனங்கள் தேவையில்லை என பாராளுமன்ற உறுப்பினர்கள் கூறியதால், வாகனங்களை வழங்க வில்லை என குறிப்பிட்டார்.

அத்துடன் வாகனங்கள் தேவையில்லை எனக் கூறும் பாராளுமன்ற உறுப்பினர்களை கைகளை உயர்த்துமாறு பிரதமர் கேட்டபோதிலும் எவரும் கைகளை உயர்த்தவில்லை எனக் கூறப்படுகிறது. எனினும் வாகனங்கள் தேவைப்படுவோர் கைகளை உயர்த்துமாறு கேட்டபோது அனைவரும் கைகளை உயர்த்தியுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இதனடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். (அ)

# கட்டுப்பாட்டு விலையைவிடவும் அதிகவிலையில் சீனி விற்பனை!

கொழும்பு, ஒக். 26
அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையை விட அதிகமான விலையில் சீனி விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் சந்தையில் தற்போது வெள்ளை சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 170 ரூபா வரை அதிகரித்துள்ளது. அத்துடன், சந்தைகளில் விற்பனைக்காக சிவப்பு சீனி மாத்திரமே காணப்படுவதாக சீனி இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

அரசாங்கத்தினால் சீனி இறக் குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், நாட்டில் நிலவும் டொலர் தட்டுப்பாடு காரணமாக சீனியை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலவுவதாக இறக்குமதியாளர்கள் குறிப்பிட்டனர்.

# பாடசாலை போக்குவரத்து சேவையை உடனடியாக முன்னெடுக்க முடியாது!

கொழும்பு, ஒக். 26
நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளினதும் ஆரம்ப பிரிவுகள் நேற்று மீண்டும் திறக்கப்பட்ட நிலையில், தம்மால் போக்குவரத்து சேவைகளை முன்னெடுக்க முடியாது என அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சேவைச் சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத் தெரிவித்துள்ளார்.

தமக்கான எவ்வித சுகாதார வழிகாட்டுதல்களும் சுகாதார அமைச்சினால் வெளியிடப்படவில்லையென அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் தொழில் துறை பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே போக்குவரத்து சேவைக்கான கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# அசாத் சாலிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல்

கொழும்பு, ஒக். 26
மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அசாத் சாலி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மார்ச் மாதம் 09 ஆம் திகதி அவர் தெரிவித்திருந்த சர்ச்சைக்குரிய கருத்து காரணமாக இவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கெரவலப்பிட்டி மின்நிலையத்தை அமெரிக்காவுக்கு வழங்கவேண்டாம்!

## தீர்மானத்தை கைவிடாவிட்டால் வேலை நிறுத்தம்: மின்சாரசபை தொழிற்சங்கம் அரசுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 26
கெரவலப்பிட்டி அனல் மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்கும் தீர்மானத்தை கைவிடாவிட்டால் நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் என இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டணி எச்சரித்துள்ளது.

போராட்டம் தொடர்பாக எதிர்வரும் 27 ஆம் திகதி அறிவிக்கப்படும். அதன்பின்னர் அரசாங்கம் தீர்வை முன்வைக்காவிட்டால் பாரிய வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு செல்வோம் என மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டணியின் ஏற்பாட்டாளரான ரஞ்சன் ஜெயலால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கெரவலப்பிட்டி அனல் மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்கவேண்டாம் என வலியுறுத்தி அனைத்து ஊழியர்களையும் நாங்கள் கொழும்புக்கு கொண்டு வருவோம்.

அதற்கும் அரசாங்கம் செவி சாய்க்கவில்லை என்றால் எமது போராட்டங்களை கடுமையாக்க நேரிடும். நாங்கள் வேலைநிறுத்தத்துக்கு சென்றால் நாடு முற்றாக இருளில் மூழ்கும்.

அத்தியாவசிய சேவைத் துறையினரான எங்களைப் போன்றோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது ஆபத்தானது என்பதை உணர்கிறோம். ஆனால் இந்த நாட்டை பாதுகாப்பதற்கு எங்களுக்கு இதனைவிட வேறு வழியில்லை - என்றார்.

இதேவேளை, கெரவலப்பிட் டி அனல் மின்நிலையத்தின் பங்குகளை அமெரிக்காவுக்கு வழங்கும் அரசின் நடவடிக்கை குறித்து ரஞ்சன் ஜெயலால் தலைமையிலான இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டணியினர் கடந்த வெள்ளிக்கிழமை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை சந்தித்துப் பேசினர்.

இதன்போது தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முழு உதவியை வழங்குவதாக மல்கம் ரஞ்சித் ஆண்டகை உறுதியளித்ததாக ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக இந்த விடயத்தில் சமய, சமூகத் தலைவர்களைச் சந்தித்து வழிப்புணர்வை ஏற்படுத்த கூட்டணி திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டணியின் போராட்டத்தால் மின்சாரத் தடை, மற்றும் எரிபொருள் விநியோகத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டால் அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் ஜெயலால் எச்சரித்தார். (அ)

# அரசு மீதான குற்றச்சாட்டுகளை ஆராய பாராளுமன்ற குழுவை அமையுங்கள்!

## அரசிடம் கோருகிறது பங்காளியான சு.க.



கொழும்பு, ஒக். 26

**இலங்கைக்கு எதிராக சர்வதேச மட்டத்திலுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் சவால்களை தொடர்பில் ஆராய்ந்து, அவற்றுக்கு தீர்வு காண்பதற்கு பாராளுமன்றக்குழுவொன்றை அமைக்குமாறு அரச பங்காளிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பில் சு.கவின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகரவால், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

இலங்கை இராணுவத் தளபதி உட்பட முப்படையிலுள்ள சிலருக்கு அமெரிக்கா செல்வதற்கான பயணத் தடை, சில மேற்குலக நாடுகளில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள், சர்வதேச அமைப்புகளின் அழுத்தங்கள், வலியுறுத்தங்கள் உள்ளிட்ட விடயங்களுக்கே தீர்வு காணப்பட வேண்டும் என சுதந்திரக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச மட்டத்திலான சவால்களுக்கு தீர்வை காணாவிடின், முன்னோக்கி பயணிக்கும்போது மேலும் பல சிக்கல்கள் உருவாகும் என்பதாலேயே சுதந்திரக்கட்சி தெரிவுக்குழு அமைக்கும் யோசனையை முன்வைத்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. (அ)

# யாழ்.பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவு

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். மாவட்டத்தில் ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளில் மாணவர்கள் வரவு மந்த நிலையில் காணப்படுவதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

நாடு பூராகவும் நேற்று ஆரம்பப்பிரிவுப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். மாவட்டத்திலும் உள்ள ஆரம்பப்பிரிவு பாடசாலைகள் வழமைபோல் ஆரம்பமாகி இடம்பெற்றன.

எனினும் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு குறைவாக காணப்பட்டதாகவும் பாடசாலைக்கு வந்த மாண வர்களோடு கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# 2022ஆம் ஆண்டு நாட்டு மக்களுக்கு சாப்பிட உணவும் இல்லாமல்போகும்

## ஹிருணிகா பிரேமச்சந்திர எச்சரிக்கை

கொழும்பு,ல் ஒக். 26

இலங்கையின் தற்போதைய ஆட்சியின் கீழ் எதிர்வரும் 2022 ஆம் ஆண்டளவில் நாட்டு மக்களுக்கு சாப்பிட உணவும் இல்லாமல் போகும் நிலைமை ஏற்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தான் ஆரம்பத்தில் கூறிய எதிர்வு கூறல்கள் தற்போது உண்மையாகி வருவதாகவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமக்கு சேதனப் பசளை வேண்டாம் என கமத்தொழிலாளர் கள் கூறுகின்றனர். எமக்கு உங்களது இலவச பசளை பொதி தேவையில்லை. கடைகளுக்கு பசளைகளை விநியோகியுங்கள் நாங்கள் பணத்தை கொடுத்து பசளைகளை கொள்வனவு செய்கிறோம் என கமத்தொழிலாளர்கள் கூறுகின்றனர்.



மக்கள் பால் மாவை கொள்வனவு செய்ய தற்போதும் வரிசையில் நிற்கின்றனர். அரசாங்கம் அவற்றை உணரவில்லை என்றால், அரசாங்கத்துக்கு தொழு நோய் ஏற்பட்டுள்ளது என்றே அர்த்தம்.

2022 ஆம் ஆண்டளவில் சாப்பிடவும் முடியாமல் போகும் என நான் அன்று கூறினேன்.

தற்போது இறுதி காலத்தை நோக்கி நகர்ந்துக்கொண்டிருக்கின்றனர். மக்களுக்கு உண்ண உணவில்லை. குடிக்க நீரில்லை. சமைக்க சமையல் எரிவாயு இல்லை. அத்துடன் பெற்றோலும் இல்லை. மக்கள் தற்போது பொம்மைகள் மீதே தாக்குதல் நடத்துகின்றனர்.

உண்மையில் எதிர்காலத்தில் ராஜபக்ஷவினர் வெளியில் இறங்கி வீதியில் செல்ல முடியாமல் போகும். ராஜபக்ஷ என்ற பரம்பரை பெயரை கேட்டால் வீதியில் செல்லும் சாதாரண நபர்களையும் மக்கள் தாக்குவார்கள். அந்தளவுக்கு ராஜபக்ஷ என்ற பெயர் அழிந்து போய்விட்டது-என்றார்.



# மன்னார் பாடசாலைகளில் கற்றல் செயல்பாடு ஆரம்பம்

மன்னார், ஒக். 26

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் நேற்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தரம் 1 முதல் 5 வரையிலான ஆரம்பப் பிரிவு வகுப்புகள் ஆரம்பமாகின.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் தரம் 1 முதல் 5 வரையில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளித்தனர்.

மேலும் பெற்றோருடன் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளித்தனர். அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பாடசாலைச் சீருடையுடனும்,சில மாணவர்கள் சாதாரண ஆடையுடனும் பாடசாலைக்கு சமூகமளித்தனர்.

# ஆசிரியர்களின் சம்பள பிரச்னைக்கு உரிய நேரத்தில் தீர்வு வழங்கப்படும்

## வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்



கொழும்பு, ஒக். 26

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னைக்கு உரிய நேரத்தில் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பேச்சுவார்த்தை தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு, உரப் பிரச்னை, 2022ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் போன்ற விடயங்கள் தொடர்பில் இதில் விரிவாகப் பேசப்பட்டது.

ஆசிரியர்கள் கடமைக்குத் திரும்புவார்கள். சம்பள முரண்பாட்டுப் பிரச்னைக்கு உரிய நேரத்தில் தீர்வு வழங்கப்படும்-என்றார்.

# வவுனியா மாவட்டத்திலிருந்து வெளி மாகாணங்களுக்கு பஸ்







வவுனியா, ஒக். 26

வவுனியாவிலிருந்து வெளி மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டன.

கோவிட்-19 பரவல் காரணமாகத் தடைப்பட்டிருந்த மாகாணங்களுக்கிடையிலான பஸ் சேவை மாணவர்கள், அத்தியாவசிய தேவை, தொழில் புரிவோரின் வசதி கருதி நேற்று முதல் நாடளாவிய ரீதியில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் வவுனியா மத்திய பஸ் நிலையத்திலிருந்து வெளி மாகாணங்களுக் கிடையிலான பஸ் சேவைகள் நேற்று காலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டன. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்கள் இச்சேவையில் ஈடுபட்டுள்ளதுடன், வவுனியா மத்திய பஸ் நிலையத்திலிருந்து கொழும்பு, கண்டி, அக்கரைப்பற்று, திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கு பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

# அசௌகரியத்துக்குள்ளான அமைச்சர் உதய கம்மன்பில

கொழும்பு, ஒக். 26

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் உதய கம்மன்பில கடும் அசௌகரியங்களுக்கு உள்ளார் என அமைச்சரவையின் தகவல்கள் தெரிவித்தன.

அமைச்சர் கம்மன்பில தாக்கல் செய்த அமைச்சரவைப் பத்திரத்தில் முன்வைத்த யோசனைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ வேறு ஒரு அமைச்சருக்கு வழங்கியதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

அமைச்சரவைக் கூட்டத்தின் போது எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, காபன் தணிப்பு கொள்கையை உருவாக்குவது மற்றும் நடைமுறைப்படுத்துவது தொடர்பான யோசனையை முன்வைத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள நிதியமைச்சர், ஏற்கனவே அரசாங்கம் காபன் தணிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருவதாக கூறியுள்ளார்.

நிதியமைச்சர் கூறியதை நிராகரித்த உதய கம்மன்பில, அந்தத் துறை எரிசக்தி அமைச்சுக்கு சொந்தமானது எனவும், எரிசக்தி அமைச்சு தனக்குரியது என்பதால், அதனைத் தான் நடைமுறைப்படுத்தப் போவதாகவும் கூறியுள்ளார்.

அமைச்சர் உதய கம்மன்பிலவின் இந்த கருத்தைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளாத நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, காபன் தணிப்பு வேலைத்திட்டத்துக்காக நேரத்தைச் செலவிடவேண்டாம் என ஆலோசனை வழங்கியுள்ளதுடன், அந்த வேலைத்திட்டத்தைச் சுற்றாடல் அமைச்சு மேற்கொள்ளும் எனவும் அறிவித்தார்.

சுற்றாடல் அமைச்சராக மகிந்த அமரவீர பதவி வகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.




# மன்னார் விவசாயிகள் நேற்று அரசுக்கு எதிராக போராட்டம்

மன்னார், ஒக்.26

**விவசாயிகளுக்கு உடனடியாக இரசாயன உரத்தை வழங்கக் கோரியும்,அரசின் திட்டமிடாத நடவடிக்கையை கண்டித்தும் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, உயிலங்குளம் பகுதியில் கண்டனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 174 கமக்கார அமைப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்த கண்டனப் போராட்டம் இடம் பெற்றது.

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி,உயிலங்குளம் சந்தியில் ஆரம்பமான பேரணி உயிலங்குளம் - மன்னார் வீதியில் அமைந்துள்ள உயிலங்குளம் கமநல சேவைகள் நிலையம் வரை இடம்பெற்றது.

இந்த பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன்,மன்னார் நகர சபை முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன், நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதி,உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கண்டனப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு பங்கேற்றனர்.

அரசின் திட்டமிடாத நடவடிக்கையை கண்டித்து விவசாயிகள் கோசம் எழுப்பியதோடு அரசாங்கம் உடனடியாக இரசாயன உரத்தை விவசாயிகளுக்கு வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை முன்வைத்தனர்.

உயிலங்குளம் கமநல சேவைகள் நிலையத்துக்கு முன் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் ஒன்று கூடினர். இதன்போது சம்பவ இடத்துக்கு வருகை தந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட வேண்டிய மகஜர் வாசிக்கப்பட்டு கையளிக்கப்பட்டது.

அந்த மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர், அதனை ஜனாதிபதிக்கு கையளிப்பதாக கூறினார்.



# ஜனாதிபதியை நேற்று சந்தித்த ஜப்பான் தூதர்

கொழும்பு, ஒக். 26

சேவைக் காலத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் சுகியாமா அக்கிரா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முற்பகல், ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தார்.

ஆறு இலட்சம் அஸ்ட்ரா செனேகா தடுப்பூசிகளை ஜப்பானிலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் கோவிட் தொற்றொழிப்பை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கும், சுகியாமா அக்கிராவினால் பல்வேறு வழிமுறைகளில் இந்நாட்டுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட சேவைகளுக்கு ஜனாதிபதி இதன்போது பாராட்டு தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான நட்புணர்வை பலப்படுத்திக்கொண்டு, தேவைப்படும் எந்தவொரு தருணத்திலும் இலங்கைக்கான ஒத்துழைப்பு வழங்கத் தான் முயற்சிப்பதாக ஜனாதிபதியிடம் ஜப்பானியத் தூதுவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர மற்றும் ஜப்பானியத் தூதரகத்தின் பிரதித் தலைவர் கட்சுகி கொட்டாரோ ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## இலங்கைக்கு பணம் அனுப்ப புதிய செயலி

கொழும்பு, ஒக். 26

இலங்கைக்கு வெளிநாட்டுப் பணத்தை அனுப்புவதற்கான புதிய செயலியை SL Remit என்ற பெயரில் அறிமுகப்படுத்துவதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். இலங்கை மத்திய வங்கியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின்போது அவர் இதனை குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து 700கோடி அமெரிக்க டொலர் பணம் நாட்டுக்கு பரிமாற்றப்படுவதாக மத்திய வங்கியின் ஆளுநர் கூறினார்.

நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணியை உரியமுறையில் கிடைக்க செய்யவே இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டதாக ஆளுநர் மேலும் கூறினார்.

# ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி மீண்டும் கோரிக்கை

கொழும்பு, ஒக். 26

“சிறைதண்டனை அனுபவித்துவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும்.”-என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கட்சியின் சார்பில் இந்த கோரிக்கையை பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க விடுத்தார்.

“ரஞ்சன் ராமநாயக்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அவரை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது. சிறைக்குள் என்ன நடக்கும் என்பது தெரியாது. எனவேதான் பொதுமன்னிப்பு வழங்குமாறு கோருகின்றோம்.

ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு வழங்கினால் அதனை எவரும் எதிர்க்கமாட்டார்கள். போராட்டங்களை முன்னெடுக்கமாட்டார்கள்.” - என்றும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார். (அ)

# கனடிய தூதரக அதிகாரிகள் யாழ். பல்கலைக்கு வருகை!

யாழ்ப்பாணம், ஒக். 26

கனடிய தூதரக அதிகாரிகள் நேற்று திங்கட் கிழமை காலை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வமாக வருகையை மேற் கொண்டனர்.

கனடிய அரசாங்கத்தின் நிதி அனுசரணையில் இலங்கையிலுள்ள நான்கு பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தின் திட்ட மேம்பாடு குறித்து ஆராயவே கனடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் குழு வருகை தந்தது.



தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் டொம் பிறவ்ணல் தலைமையில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, திட்ட ஆலோசகர் ஆகி யோரே கனடியத் தூதரகத்தின் சார்பில் வருகை தந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, கலைப் பீடாதிபதி கலாநிதி கே. சுதாகர், மொழிபெயர்ப்புகள் கற்றல் துறையின் தலைவர் எஸ். கண்ணதாஸ் ஆகியோரை கனடிய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் சந்தித்து திட்ட மேம்பாடு குறித்துக் கேட்டறிந்தனர். (ஐ-03)

# எரிபொருள் விலை உயர்வு; இன்னும் தீர்மானம் இல்லை

கொழும்பு, ஒக். 26

எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பது குறித்து இதுவரையில் எந்தவொரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.



“ பொது முடக்கத்தை அரசாங்கம் விலக்கி விட்டது என்றவுடன் பழையபடி எல்லோரும் திரியத் தொடங்கி விட்டனர். மாஸ்க்கை காதில் கொழுவி கழுத்தில் இழுத்து விட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய தொண்டைக்குழியில் சுருக்குக் கயிற்றைப்போல மாஸ்க் நிற்கிறது.




# கோவிட் பொருளாதார நெருக்கடியும் பொதுமக்களுக்குள்ள பொறுப்புக்களும்

கருணாகரன்

நாட்டில் விலைவாசி மலைபோல ஏறிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் பதட்டத்தோடுதான் மக்கள் வாழ வேண்டிய நிலை. வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை என்று சனங்கள் அழுகிறார்கள்.

சிலர் அரசாங்கத்தைத் திட்டுகிறார்கள். அரசாங்கத்தைத் திட்டி என்ன செய்துவிட முடியும்? இந்த அரசாங்கத்தை மாற்றுவதுதான் மீட்சிக்கு வழி என்று பலரும் சொல்கிறார்கள்.

இது நாட்டின் பொருளாதாரத்தோடு சம்மந்தப்பட்டது. இந்த அரசாங்கமாவது இந்தளவுக்குத் தாக்குப் பிடிக்கிறது. இல்லையென்றால் கஞ்சிக்கும் வழியற்றுப் போய் விடும் என்று சொல்வோரும் உண்டு.

இவை எல்லாவற்றுக்கும் காரணம் பொருளாதார நெருக்கடியே. பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவற்றில் முக்கியமான ஒன்று சீரற்ற பொருளாதாரக் கொள்கையும் முறையற்ற பொருளாதார நடவடிக்கைகளும். இன்னொன்று, கொரோனா தொற்று. கொரோனா தொற்றினால் நாடு முடங்கியது. நாடு முடங்கியதால் தொழில்துறைகளும் உற்பத்தித்துறையும் படுத்தன. போதாக்குறைக்கு இலங்கையை சிவப்புப் பட்டியலில் சேர்த்தது உலகம்.

இதனால் நாட்டின் பிரதான வருவாயை ஈட்டித்தரும் சுற்றுலாத்துறை அப்படியே படுத்தது. உற்பத்தித்துறைகளிலும் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டது.

இப்படி எல்லா வருவாய்ப் பகுதிகளும் முடக்கத்துக்குள்ளாகினால் நிலை என்னவாகும்? பொருளாதார நெருக்கடி பிசாசைப் போலப் பிடித்தாட்டும்.

ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் வேலை எதற்கும் போகாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தால் அந்தக் குடும்பத்தின் நிலை என்னவாகும்? அடுப்பில் பூனை படுக்கிறது என்பார்களே, அப்படியான ஒரு நிலையில்தான் இலங்கை இன்றுள்ளது.

இதனைத்தான் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஏறிச்செல்லும் விலையைக் கட்டுப்படுத்தவும் முடியாமல் எட்டிப்பிடிக்கவும் முடியாமல் திணறுகிறோம். இந்த நிலைமையை மாற்றுவது எப்படி?

இதற்கு முதலில் இலங்கையை சிவப்பு வலயத்திலிருந்து - அபாய வலயத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்க வேண்டும். இப்பொழுது சிவப்பு வலையத்திலிருந்து ஒருவாறு நாடு பச்சை வலயத்திற்குள் பிரவேசித்துள்ளது. இதை எட்டுவதற்காக நாட்டை அரசாங்கம் முடக்கி வைத்திருந்தது. மக்களும் ஓரளவுக்கு (ஓரளவுக்குத்தான்) இந்த முடக்கத்திற்கு ஒத்துழைத்தனர். அதன் பயனாக நாடு அபாய வலயத்திலிருந்து மெல்ல விடுபட்டுள்ளது. பச்சை வலயத்திற்குள் பிரவேசித்துள்ளது.

பொது முடக்கத்தை அரசாங்கம் அறிவித்திருந்தாலும் பலரும் அதை மீறிச் சுழித்துக் கொண்டு பொறுப்பற்றுத் திரிந்தனர். இப்படித் திரிந்தவர்களில் ஒரு தொகுதியினர் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். ஏனையோர் ஏதோ சாட்டுப் போக்குகளைச் சொல்லிக் கொண்டு கண்டபாட்டுக்குத் திரிந்தனர்.

இவர்களே கொரோனா தொற்றுக்காவிகளாக இருக்க நேர்ந்ததால் இவர்களே நாட்டை சிவப்பு வலையப்பட்டியலுக்குள் தள்ளி வைத்திருந்தவர்களாவர். அதாவது நாட்டின் நெருக்கடிக்கு இவர்களும் ஒரு வகையில் காரணமாகின்றனர். இத்தகையவர்களால் ஒட்டு மொத்த மக்களும் நாடும் நெருக்கடியைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

எப்படியோ எல்லாவற்றையும் கடந்து இப்பொழுது நாடு மீண்டும் பச்சை வலயத்துக்குள் பிரவேசித்துள்ளது என்று மகிழ்ச்சி தெரிவிக்கிறார் சுகாதார அமைச்சின் தொழில் நுட்ப சேவைகள் பிரிவுப் பணிப்பாளர், அன்வர் ஹம்தானி. இதைத் தக்க வைப்பது மக்களுடைய கைகளில் - அதாவது மக்களுடைய சிந்தனையில்தான் உள்ளது என்ற உண்மையையும் கூறுகிறார் ஹம்தானி.

அவர் கூறுவது முற்றிலும் உண்மையே. மக்கள் மாஸ்க் அணிவதிலிருந்து நடமாட்டத்தைக் குறைப்பது வரையில் ஒவ்வொருவரும் பொறுப்பாக நடந்து கொண்டால் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தி விடலாம். அத்துடன் தயக்கமின்றி தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்வதும் அவசியம். இரண்டையும் முறைப்படி செய்து கொண்டால் ஓரளவு பரவாயில்லை. பல படிகள் முன்னேறி விடலாம்.

இதேவேளை மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தும் தொடர்பாடலும் இன்னும் சீராகவில்லை. பாடசாலைகள் இயங்கவில்லை. பாடசாலைகளை இயக்குவதற்கு அரசாங்கம் முயற்சித்தாலும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அதற்கு ஒத்துழைக்க மறுக்கின்றன. ஆகவே இயல்பு நிலையை எட்டுவதற்கு இன்னும் பயணிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை கொரொனோ தொற்றும் கொரோனா மரணங்களும் குறைந்தளவிலேனும் நிகழ்ந்து கொண்டுதானுள்ளன. இயல்பு நிலையை ஏற்படுத்த முனைந்தால் இவற்றின் எல்லைகள் விரிவடையலாம் என்று கூறப்படுகிறது. நாட்டில் கொரோனா தொற்றும் கொரோனா மரணங்களும் நிகழ்கின்றன என்றால் யார்தான் யோசிக்காமல் நாட்டுக்கு வருவார்கள்?

யாரும் நாட்டுக்கு வரவில்லை என்றால், நாடு தொடந்தும் அபாய வலயத்திற் சிக்கினால், நாட்டைத் தொடர்ந்தும் முடக்கத்திற்குள் வைத்திருந்தால் எப்படி பொருளாதார நெருக்கடி நீங்கும்? எப்படி மக்கள் வாழ்க்கை உயர்வடையும்?

எனவே மக்களாகிய எங்களுடைய கைகளில் - மனங்களில் - தான் நம்முடைய எதிர்காலமும் நாட்டினுடைய எதிர்காலமும் தங்கியுள்ளன.

இதற்கு நாம் முழுப்பொறுப்பாளிகளாகச் செயற்பட வேண்டும். போராளிகளுக்கு இருப்பதைப் போன்ற விசுவாச உணர்வையும் அர்ப்பணிப்பையும் நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் போராளிகளைப் போல அர்ப்பணிப்போடு செயற்பட வேண்டும். அப்பொழுதுதான் எல்லா நெருக்கடிகளும் தணியும்.

பொது முடக்கத்தை அரசாங்கம் விலக்கி விட்டது என்றவுடன் பழையபடி எல்லோரும் திரியத் தொடங்கி விட்டனர். மாஸ்க்கை காதில் கொழுவி கழுத்தில் இழுத்து விட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய தொண்டைக் குழியில் சுருக்குக் கயிற்றைப்போல மாஸ்க் நிற்கிறது. இப்படிப் போனால் நிச்சயமாக அது தொண்டைக்குழியை இறுக்கும் சுருக்காகவே அமையும். இது ஆபத்தானது. இப்படி தொடர்ந்தும் நடந்தால் நாடு மறுபடியும் சிவப்பு வலயத்திற்குள் தள்ளப்பட்டு விடும் என்று எச்சரித்திருக்கிறார், அன்வர் ஹம்தானி. அவர் தன்னுடைய பணியைச் செய்கிறார். அதனால் நிலைமையைப் பொறுப்பாகச் சொல்கிறார்.

இதனால்தான் பொது முடக்கத்தை அரசாங்கம் விலக்க வேண்டும். புரிந்துணர்வையும் பொறுப்புணர்வையும் கொண்டு மக்கள் நடந்து கொள்ள வேண்டும் என இந்தப் பத்தியில் நாம் தொடராக பேசி வருகிறோம். இந்தப் பொறுப்பேற்புத்தான் நம்மை மீட்டுக் காப்பாற்றுவதும் நம்மை முன்கொண்டு செல்வதுமாகும்.

அரசாங்கம் கதவைத் திறப்பதற்கும் திறக்கும் கதவின் வழியாக நிகழ்வனவற்றை வெளியுலகம் ஏற்றுக் கொள்வதற்கும் சுமுகச் சூழல் வேண்டும். போக்கும் வரவும் இல்லையென்றால், ஊடாட்டங்கள் நிகழவில்லை என்றால், வெளியாட்கள் வரவில்லை என்றால் அந்நியச் செலாவணி மூலம் திரட்டப்படும் நிதி கிடைக்காது. அந்த நிதி இல்லை என்றால் விலை உயரும். விலை ஏறினால் வாழ்க்கை சிறுக்கும். ஆகவேதான் எப்படியும் இயல்புச் சூழலை உருவாக்க வேண்டும் என்கிறோம்.

இதை நாமெல்லோரும் இணைந்து உருவாக்குவோம். அதன் மூலம் நம்மைச் சுற்றியுள்ள நெருக்கடிகளிலிருந்து விடுபடுவோம். அப்படி விடுபடும்போதே நமக்கு உண்மையான - இயல்பான வாழ்க்கை கிட்டும்.

உலகம் முழுவதிலும் கோவிட் 19 இன் அச்சுறுத்தலிலிருந்தும் நெருக்கடியிலிருந்தும் மக்கள் விடுபட்டது பொறுப்புணர்வான நடவடிக்கைகளால்தான். சீனா தொடக்கம் அமெரிக்கா வரை இதுதான் உதாரணம். மக்களின் ஒத்துழைப்பும் பொறுப்புணர்வும் இல்லையென்றால் எத்தனை சட்டங்களையும் திட்டங்களையும் போட்டாலும் பயன் கிட்டாது.

இப்பொழுது பல நாடுகள் மெல்ல மெல்ல இயல்பு நிலையடைந்து வருகின்றன. ஆனாலும் அங்கும் தொற்றும் மரணமும் இருந்து கொண்டுதான் உள்ளது. அதற்காக அவர்கள் நாட்டை மூடி வைத்திருக்கவில்லை. திறப்பதற்கான வழிமுறைகளைப் பற்றியே தொடர்ந்தும் சிந்திக்கிறார்கள். வளர்ச்சி அடைந்த நாடுகளே இப்படிச் சிந்திக்கும்போது வளர்முக நாடாக இருக்கும் நாம் எப்படிப் பொறுப்பாகக் கவனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று யோசித்துப் பாருங்கள்.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களால் அவுஸ்திரேலிய அரசாங்கமே ஆடிப் போய் நிற்கிறது. பிரான்ஸில் இன்னும் பதற்றம் முற்றாக நீங்கவில்லை. இப்படி வளர்ச்சியடைந்த நாடுகளே திக்கித் திணறும்போது நாம் எம்மாத்திரம்?

ஆனால் ஒன்று உள்ளூர் உற்பத்தியாளர்களான விவசாயிகளும் மீனவர்களும் பிற தொழிற்துறையினரும் இந்த இடர்க்காலப்பகுதியில் பெரும் பங்காற்றியிருக்கின்றனர். காத்தற் கடவுளர்களாகச் செயற்பட்டிருக்கின்றனர். இதனால் உணவுத்தட்டுப்பாடு ஏற்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் உணவு சார் உற்பத்தித்துறை சற்று விரிவடைந்துள்ளது. முன்னேறியுள்ளது எனலாம்.

இதை மேலும் வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது. மக்கள் அரசாங்கத்தையும் அரசாங்கம் மக்களையும் மாறி மாறிக் குறை சொல்லிக் கொண்டிருக்காமல் ஒருங்கிணைந்த ஒரு சிறப்பான வேலைத்திட்டத்தின் கீழ் பணிகளை மேற்கொண்டால்தான் எல்லாவற்றையும் கடந்து செல்ல முடியும்.

நாம் ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டதைப்போல இது ஒரு பொறுப்புணர்வான செயல், பொறுப்பான விசயம், ஒருங்கிணைந்து வேலை செய்ய வேண்டிய முக்கியமான பணி என்பதில் அனைவரும் தெளிவோடும் உறுதியோடுமிருக்க வேண்டும். நாடு மேலும் முடங்கினால் சனங்களால் அதைத் தாக்குப் பிடிக்க முடியாது.

பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல, உளவியல் நெருக்கடி தொடக்கம் குடும்பத்துக்குள் நிகழும் குழப்பங்கள், வன்முறைகள் வரையில் தொடரும். எல்லாமே அதிகரிக்கும். முக்கியமாகப் பள்ளிப் பிள்ளைகளின் - எதிர்காலத்தலைமுறையின் - வாழ்க்கை பாதிக்கப்பட்டு விடும். இதற்கெல்லாம் விடுதலை அளிக்க வேண்டாமா? வழி காண முடியாதா?

**- அரங்கம்** ■

# மனிதருக்கு பன்றியின் சிறுநீரகம்: மருத்துவத்துறையில் ஒரு சாதனை



மிஷெல் ராபர்ட்ஸ்

அமெரிக்க அறுவை சிகிச்சை வல்லுநர்கள், ஒரு மனிதருக்கு பன்றியின் சிறுநீரகத்தை பொருத்தி சோதித்தனர். இது உடல் உறுப்பு தான பற்றாக்குறையை தீர்க்கும் என அவர்கள் நம்புகின்றனர்.

மூளைச்சாவு ஏற்பட்டு மருத்துவக் கருவிகளின் உதவியோடு சுவாசித்துவந்த நபருக்கு இந்த பன்றியின் சிறுநீரகத்தைப் பொருத்தி அதை உடல் ஏற்றுக்கொள்கிறதா அல்லது நிராகரிக்கிறதா என்று மருத்துவர்கள் சோதித்தனர்.

முன்னதாக, பன்றியிடம் இருந்து வந்த சிறுநீரகத்தை, மனித உடல் நிராகரித்து விடக் கூடாது என்பதற்காக மரபணு ரீதியாக சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

இந்த ஆய்வினை சக வல்லுநர்கள் சீராய்வு செய்யவில்லை. சீராய்வு செய்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிடும் சஞ்சிகைகளிலும் இந்த ஆய்வு வெளியாகவில்லை. ஆனால், அதற்கான முயற்சிகள் நடந்துவருகின்றன.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை துறையில், இதுவரை மேற்கொள்ளப்பட்டவைகளில் இது ஒரு மிகப் பெரிய சோதனை முயற்சி என நிபுணர்கள் கூறுகின்றனர்.

பன்றியின் உறுப்புகளை மனிதர்களுக்கு பயன்படுத்துவது இது ஒன்றும் முதல் முறையல்ல. பன்றியின் இதய வால்வுகள் பரவலாக மனிதர்களுக்கு பொருத்தப்பட்டுள்ளன.

பொதுவாக பன்றியின் உடல் உறுப்புகள், அளவின் அடிப்படையில் மனிதர்களுக்கு சிறப்பாக பொருந்திப் போகக் கூடியவை.

அந்த சிறுநீரகத்தை மனிதருக்குப் பொருத்திய பிறகு அடுத்த இரண்டரை நாட்களுக்கு சிறுநீரகத்தை தீவிரமாக கண்காணித்து பல்வேறு மருத்துவ பரிசோதனைகளை வல்லுநர்கள் மேற்கொண்டனர்.

ஒரு பன்றியின் சிறுநீரகம், மனிதர்களின் சிறுநீரகத்தைப் போலவே செயல்படுவதைக் கண்டோம் என மருத்துவர் ராபர்ட் மான்ட்கொமெரி கூறினார். “அந்த சிறுநீரகம் சீராக வேலை செய்தது, மனித உடல் அதை நிராகரிப்பது போலத் தெரியவில்லை” என்றும் அவர் குறிப்பிட்டார்.

அறுவை சிகிச்சை வல்லுநர்கள், சிறுநீரகத்தோடு பன்றியின் ஒரு சிறு பகுதி தைமஸ் சுரப்பியையும் மாற்றியுள்ளனர். நீண்ட காலத்தில், மனித உடல் சிறுநீரகத்தை நிராகரிப்பதிலிருந்து காப்பாற்ற, பன்றியின் திசுக்களோடு போராடும் மனித உடலின் எதிர்ப்புத் திறன் கொண்ட செல்களை திரட்டி, நிராகரிப்பைத் தடுக்க இந்த பாகம் உதவும் என மருத்துவ வல்லுநர்கள் கருதுகின்றனர்.

வழக்கமாக ஒருவர் உறுப்பு தானம் பெற வேண்டுமானால், தானம் கொடுப்பவர் இறக்க வேண்டும், அப்போது தான் மற்றொருவர் வாழ முடியும். இது நீண்ட காலத்துக்கு சரிப்பட்டு வராது என்கிறார் மருத்துவர் ராபர்ட்.

தற்போது உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்காக காத்திருக்கும் 40 சதவீத நோயாளிகள், அவர்களுக்கான உறுப்பு கிடைப்பதற்கு முன்பே இறந்துவிடுகிறார்கள். நாம் பன்றியை உணவாக உட்கொள்கிறோம், பன்றியை மருந்துக்காகவும், அதன் ரத்த நாளங்களையும் பயன்படுத்துகிறோம். எனவே பன்றியின் உறுப்பை மனிதர்களுக்கு பயன்படுத்துவதும் பெரிய விஷயமல்ல என்கிறார் ராபர்ட்.

இந்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான ஆராய்ச்சிகள் தொடக்க கட்டத்தில்தான் இருக்கின்றன என்றும், இது குறித்து நிறைய ஆய்வுகள் தேவை என்றும் கூறியுள்ளார் மருத்துவர் ராபர்ட்.

இந்த அறுவை சிகிச்சையைப் மேற் கொள்ளப்பட்டவரின் குடும்பத்தினர், இந்த சிகிச்சைக்கு சம்மதம் தெரிவித்துள் ளனர். அமெரிக்காவின் எஃப்.டி.ஏ என்கிற உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பும் மரபணு மாற்றப்பட்ட பன்றியின் உறுப்புகளை இது போன்ற ஆய்வுகளுக்கு பயன்படுத்த அனுமதித் துள்ளது குறிப்பிடத்தக்கது.

பத்தாண்டு காலத்தில் பன்றியின் இதயம், நுரையீரல், கல்லீரல் மனிதர்களுக்கு வழங்கப்படலாம் என நம்புகிறார் மருத்துவர் ராபர்ட்.

---

# பாடசாலை பிள்ளைகளின் சுமையை குறைக்க சீன அரசின் புதிய திட்டம்

**“ குழந்தைகள் போதுமான நேரம் ஓய்வு எடுக்கவும், உடற்பயிற்சி செய்யவும், அவர்கள் அதிக நேரம் இணையத்தில் செலவழிக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறு குழந்தைகளின் பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.**



சீனாவில் பாடசாலை மாணவர்களின் வீட்டுப் பாட அழுத்தம் மற்றும் பள்ளி நேரத்துக்குப் பிறகான சிறப்பு வகுப்புகள் தொடர்பான அழுத்தத்தைக் குறைக்கும் குறிக்கோளோடு ஒரு புதிய கல்விச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

குழந்தைகள் போதுமான நேரம் ஓய்வு எடுக்கவும், உடற்பயிற்சி செய்யவும், அவர்கள் அதிக நேரம் இணையத்தில் செலவழிக்காமல் இருப்பதை உறுதி செய்யுமாறு குழந்தைகளின் பெற்றோர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில்தான் ஆறு மற்றும் ஏழு வயது குழந்தைகளுக்கான எழுத்துத் தேர்வுகள் ரத்து செய்யப்பட்டன. குழந்தைகளின் உடல் மற்றும் மனநலம் பாதிக்கப்படுவதாக அப்போது அதிகாரிகள் கூறினர்.

இணையத்துக்கும், பிரபல கலாசாரங்களுக்கும் அடிமையாக இருப்பதை குறைக்கும் நோக்கோடு கடந்த ஆண்டு சீனாவில் பல்வேறு சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

அது தொடர்பான சமீபத்திய சட்டங்கள், சீனாவின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிலைக் குழுவால் சனிக்கிழமை நிறைவேற்றப்பட்டன. இவ்வமைப்பு தான் சீனாவில் நிரந்தரமாக இருக்கும் சட்டமியற்றும் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டம் தொடர்பான முழு விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை. ஆனால் பெற்றோர்கள், குழந்தைகளுக்கு நல்ல விடயங்களை போதிப்பது, அறிவு சார் மேம்பாடுகள் மற்றும் சமூக பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுக்க அது ஊக்குவிக்கிறது.

இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவது உள்ளூர் அரசாங்கத்தின் பொறுப்பு. அதாவது கல்வி தவிர மற்ற நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்குவது போன்ற பணிகளுக்கு பொறுப்பு.

இந்த சட்டம் தொடர்பாக சீன சமூக வலைதளத்தில் கலவையான கருத்துகள் வந்துள்ளன. சில பயனர்கள் நல்ல குழந்தை வளர்ப்புக்கான முன்னெடுப்பு என பாராட்டினர், சிலரோ இச்சட்டத்தில் குறிப்பிடுவதை உள்ளூர் அதிகாரிகளோ அல்லது பெற்றோர்களோ செய்ய முடியுமா என கேள்வி எழுப்புகின்றனர்.

“நான் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை, வாரம் ஆறு நாட்கள் வேலை செய்கிறேன், நான் இரவு வீட்டுக்கு வந்த பிறகும் குடும்ப கல்வி போதனைகளை மேற்கொள்ள வேண்டுமா? என ஒரு பயனர் கூறியதாக “சௌத் சைனா மோர்னிங் போஸ்ட்” பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கடந்த ஜூலை மாதம், சீனாவில் லாப நோக்கில் முக்கிய பாடங்களை பயிற்றுவிக்கும் இணைய வழி பயிற்சி வகுப்புகளுக்கு தடை விதித்தது அரசு.

அந்த புதிய கட்டுப்பாடுகள், தனியார் பயிற்சித் துறையில் அந்நிய நேரடி முதலீடுகள் வருவதில் பல கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது. 120 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட அத்துறையை இச்சட்டம் கடுமையாக பாதித்துள்ளது.

இது சீனாவில் பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்கத் தேவையான செலவுகளைக் குறைக்க அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கை என அப்போது கூறப்பட்டது. ஏற்கனவே சீனாவில் குழந்தைகள் பிறப்பு விகிதம் வரலாறு காணாத அளவுக்கு குறைவாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

- பி.பி.சி.


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I
நேரம் : 1 மணித்தியாலம்


- 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.

1.




1) 2) 3)

2.



1) 2) 3)


3. 3, 4 ஆகிய வினாக்களில் தரப்பட்ட உருக்களில் இரண்டு ஒத்தவை அந்த இரண்டு உருக்களும் யாவை?



P Q R

1) P உம் R உம் 2) P உம் Q உம் 3) Q உம் R உம்

4.



A B C


1) A உம் C உம் 2) B உம் C உம் 3) A உம் B உம்

- **5ஆம், 6ஆம் வினாக்களுக்கு ஒன்றோடு ஒன்று தொடர்பு இல்லாத சொற்கள், உருக்கள் இடம் பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.**

5.

| 1) | 2) | 3) |
|---|---|---|
| பங்கயம்<br>கமலம்<br>அம்புயம் | செம்மை<br>கருமை<br>பசுமை | நீதிபதி<br>மேசை<br>நம்பி |

6.




1) 2) 3)

- தரப்பட்டவற்றிடையே மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரியவை யாவை ?

7. மணியாசு, கைக்குட்டை, மூக்குக்கண்ணாடி, மண்வெட்டி, பற்றாரிகை.
   **(1)** பற்றாரிகை, மணியாசு
   **(2)** மண்வெட்டி, மணியாசு
   **(3)** கைக்குட்டை, பற்றாரிகை

8. சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.
   1) எங்கள் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளிப்பார்கள்.
   2) எங்கல் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகமளிப்பார்கள்.
   3) எங்கள் மாணவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காகச் சமுகமளிப்பார்கள்.

9.




உருவை முறிகோடு வழியாக மடித்துப் புள்ளிக்கோடு வழியாக வெட்டினால் கிடைக்கும் முக்கோணிகளின் எண்ணிக்கை.
1) 6
2) 4
3) 8

10. "எந்தத் தொழிலிலும் போட்டித்தன்மை இருந்தால் உயர்வு அடையலாம்" என்னும் கருத்தை உணர்த்தும் பழமொழி
    1) எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
    2) முயற்சி திருவினையாக்கும்
    3) கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.

11. பின்வரும் விழாக்கள் கொண்டாடப்படும் கால எண்ணிக்கையின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடை எது?
    A – அமுதவிழா C – பவளவிழா E – வெள்ளிவிழா
    B – பொன்விழா D – வைரவிழா
    1) B E D C A 2) E B D C A 3) E B C A D

12. ஒருவன் 15789 என்பதை X T Z A L என்று எழுதுகிறான். 2 3 4 6 என்பதை NPSU என்று எழுதுகிறான் எனின் 2 3 5 4 0 என்பதை எப்படி எழுதுவான்?
    1) N P T S R 2) N P T S L 3) N T S L R

# அன்று எம் கருத்தை அரசு கேட்காததால் இன்று பாரிய பிரச்னை உருவெடுப்பு!

## மைத்திரி பகிரங்க குற்றச்சாட்டு



பொலனறுவை, ஒக். 26

**“இரசாயன உரம் இறக்குமதி செய்யத் தடை விதித்த ஆரம்பத்திலேயே, அதனால் ஏற்படக்கூடிய பாதிப்பு தொடர்பாக அரசுக்கு எடுத்துக்கூறி இருந்தோம். எனினும், எமது கருத்துக்களை அரசு கண்டுகொள்ளவில்லை. அதன் விளைவே தற்போது பாரிய பிரச்னையாக மாறி இருக்கின்றது.“**

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலனறுவை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வுவொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

“அரசு இரசாயன உரம் இறக்குமதி செய்யத் தடைவித்தது கடந்த போகத்தின் ஆரம்பத்திலாகும். இதன்போது ஊடகங்கள் ஊடாக விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டதுடன் விவசாயிகள் மத்தியிலும் அமைதியின்மை ஏற்பட்டு வீதிகளில் சிறிதளவில் போராட்டங்கள் நடத்தி வந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

அரசின் இந்தத் தீர்மானம் நல்லதாக இருந்தாலும் இது அவசரப்பட்டு செய்யக்கூடிய விடயமல்ல என்பதை இதன் ஆரம்பத்திலேயே அரசில் இருக்கும் பொறுப்பு வாய்ந்த அனைவருக்கும் தெரிவித்திருந்தேன்.

விசேடமாக இரசாயன உரத்தில் இருந்து சேதன உரத்துக்கு மாற்றுவதாக இருந்தால் அதனை உடனடியாக மேற்கொள்ள முடியாது. நானும் அமைச்சராக, ஜனாதிபதியாக இருந்து முன்மாதிரி நடவடிக்கையாக சேதன உரத்தில் விவசாயம் செய்தேன்.

அதனால் இந்த நடவடிக்கையை 10 வருடங்கள் அல்லது 5 வருடங்களுக்கான வேலைத் திட்டமாகப் படிப்படியாகவே மேற்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூறியிருந்தேன். அதன்பின்னர் எமது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்றக் குழு இது தொடர்பாக அரசில் இருக்கும் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தி இருந்தது.

அத்துடன் உரப் பிரச்னை மற்றும் அதனால் ஏற்பட்டிருக்கும் கவலைக்குரிய நிலைமைகள் தொடர்பாக தெளிவுபடுத்தி கட்சி என்ற அடிப்படையில் அரசுக்குக் கடிதம் மூலம் அறிவுறுத்த நடவடிக்கை எடுத்தோம். எமது பொறுப்பை நாங்கள் சரியாக அரசுக்குத் தெரிவித்திருந்தோம்.

எனினும், எமது கருத்துக்கள், ஆலோசனைகளை அரசு கருத்தில்கொள்ளவில்லை. அதனால்தான் தற்போது உரப் பிரச்சினை பாரிய பிரச்னையாக மாறி இருக்கின்றது” - என்றார். (இ)

# நீரில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 26

நீர்கொழும்பு, கொச்சிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாஓயாவில் நீராடச் சென்ற நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று கொச்சிக்கடைப் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

அம்பலயாய, கட்டான பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயது இளைஞரே மரணமடைந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கொச்சிக்கடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)



# பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிக்க ஏன் அஞ்சுகின்றீர்?

## அரசிடம் மாணவர் ஒன்றியம் கேள்வி

கொழும்பு, ஒக். 26

“ஆரம்பப் பிரிவு மாணவர்களுடைய கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைளை ஆரம்பிக்க முடியுமென்றால் ஏன் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க முடியாது? ஏன் அரசு அச்சமடைகின்றது?”

- இவ்வாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தல்லவ ஸ்ரீதன்ன தேரர் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“கல்வித்துறையின் கட்டமைப்பு ஸ்தம்பிதம் அடைந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ளன.

ஒருபுறம் பல்கலைக்கழக கட்டமைப்பும் மறுபுறம் பாடசாலைக் கட்டமைப்பும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

ஆனால், இந்தக் காலப்பகுதிக்குள் பாடசாலையையோ அல்லது பல்கலைக்கழகத்தையோ ஆரம்பித்தல் தொடர்பான எந்தச் செயற்றிட்டங்களும் அரசிடம் இருக்கவில்லை.

தற்போதைய நிலைப்பாட்டினுள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களை ஆரம்பித்தல் தொடர்பான ஆலோசனைகளை நாமும் அரசிடம் முன்வைத்திருந்தோம். ஆனால், அது தொடர்பில் அரசு எந்தக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை.

மாறாக அவர்கள் நிகழ்நிலை கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைளை மாத்திரமே முன்னெடுப்பதற்கான யோனையை முன்வைத்தனர்.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுடைய கற்றல் கற்பித்தல் நடவடிக்கைளை ஆரம்பிக்க முடியுமென்றால் ஏன் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க முடியாது? ஏன் அரசு அச்சமடைகின்றது?” - என்றார். (இ)

# இரத்த காயங்களுடன் 2 ஆண்களின் சடலங்கள்

பதுளை, ஒக். 26

பதுளை மாவட்டம், பண்டாரவளையின் இருவேறு பகுதிகளில் இரத்தக் காயங்களுடன் இரு ஆண்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

“இருவரின் சடலங்கள் கிடக்கின்றன என்று பண்டாரவளை பொலிஸ் நிலையத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

அதற்கமைய பண்டாரவளை - நாயபெத்த தோட்டம், கோணமுட்டாவ வீதியின் தேயிலைத் தோட்டத்தில் உள்ள வடிகான் ஒன்றில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது.

அதேபோன்று பண்டாரவளை - மீரியகஹ சந்தியில் உள்ள வடிகானுக்கு அருகிலிருந்து மற்றுமொரு ஆணின் சடலம் மீட்கப்பட்டது.

குறித்த இரு சடலங்களும் இரத்தக் காயங்களுடன் மீட்கப்பட்டன. சடலங்கள் இது வரை அடையாளம் காணப்படவில்லை.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்” - என்றார். (இ)

# போதைப்பொருட்கள், துப்பாக்கிகளுடன் 6 பேர் கைது!

பல்வேறு இடங்களில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில் போதைப்பொருட்கள் மற்றும் துப்பாக்கிகளுடன் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக கொழும்பு, முகத்துவாரம் பகுதியில், 5 கிராம் 570 மில்லிகிராம் ஹெரோயினுடன் 38 வயது நபர் கைதுசெய்யப்பட்டார்.

கொழும்பு, பொரளை - கோதமிபுர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 05 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயினுடன் 42 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, முகத்துவாரம் - டவலசிங்காராம பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 03 கிராம் 340 மில்லிகிராம் ஹெரோயினுடன் 42 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, கம்பஹா, கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹீனட்டியன பிரதேசத்தில் 560 லீற்றர் மதுபானத்துடன் மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதேவேளை, குருநாகல், பொல்காஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் நாரம்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயது நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ)

# மாணவர்களை பாடசாலைகளுக்கு அனுப்ப சிறிதேனும் அஞ்சாதீர்கள்!

## பெற்றோருக்கு சுகாதார தரப்பினர் அறிவுறுத்து

கொழும்பு, ஒக். 26

பாடசாலைகளில் சுகாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், பெற்றோர் எவ்வித அச்சமுமின்றி மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புமாறு சுகாதாரத் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள கொழும்பு லேடி ரிஜ்வே வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தீபால் பெரேரா,

“மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்புவதில் சிறிதேனும் அச்சம்கொள்ளத் தேவையில்லை. தற்போதைய நிலையில் எமது பிள்ளைகள், முகக்கவசம் அணிவதற்குப் பழக்கப்பட்டுத்தப்பட்டுள்ளனர்.

விசேடமாக இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் கூட முகக்கவசம் அணிவதற்குப் பழக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளின் சிற்றுண்டிச்சாலைகளில் உணவு உண்பதற்கு சிறுவர்களைப் பழக்கப்படுத்த வேண்டாம்.

பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கு வெளியில், எவ்வாறான சுகாதார நடைமுறைகளைப் பேண வேண்டும் என்று சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள்.

நாடளாவிய ரீதியில் உள்ள சகல அரச பாடசாலைகளிலும் ஆரம்ப வகுப்புகள், சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நேற்று ஆரம்பமாகியுள்ளன.

கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக பாடசாலைகளில் கிருமி தொற்றுநீக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன”

- என்றார். (இ)

# பட்டினி அபாயத்தில் ஆப்கான்; பல்லாயிரம் பேர் இறக்கலாம்!

## ஐ. நா. உணவு திட்டம் எச்சரிக்கை

- 2.28 கோடி மக்கள் கடும் உணவு நெருக்கடியில்
- 32 இலட்சம் குழந்தைகள் பாதிக்கப்படும் அபாயம்
- பட்டினியுடன் வறட்சியும் வாட்டுகின்றது

ஜெனிவா, ஒக். 26

அவசர நடவடிக்கை எடுக்கப்படாது விடின் பல இலட்சம் ஆப்கானியர்கள் குளிர் காலத்தில் பட்டினியை எதிர்கொள்வர். ஏராள மானவர்கள் உயிரிழக்கவும் நேரிடும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவு திட்டம் எச்சரித்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மக்கள் தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் - சுமார் 2 கோடியே 28 இலட்சம் பேர் கடுமையான உணவு நெருக்கடியை எதிர்கொள்கின்றனர். 5 வயதுக்குக் குறைந்த 32 இலட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

"ஆப்கானிஸ்தான் இப்போது உலகின் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடிகளில் ஒன்றாக உள்ளது. இது மிக மோசமானது", என்று உலக உணவு திட்டத்தின் நிர்வாக இயக்குநர் டேவிடி பீஸ்லி கூறினார்.

கடந்த ஓகஸ்ட் மாதம், ஆப்கானிஸ்தான் தலிபான்களிடம் வீழ்ந்தது. இது ஏற்கனவே பல வீனமான நிலையிலிருந்த பொருளாதாரத்தை பலவீனப்படுத்தியது. அந்த நாட்டுக்கு கிடைத்து வந்த வெளிநாட்டு உதவிகள் நின்றன. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பனவும் நிதி வழங்குவதை நிறுத்தின.

ஆப்கானிஸ்தான் தனது மொத்த வருமானத்தில் 40 சதவீதம் சர்வதேச உதவிகளை மட்டுமே நம்பியிருந்தது. இந்த உதவிகள் நிறுத்தப்பட்டமையால் தற்போது அந்த நாடு பலத்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றது. பல மாதங்களாக அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. உடைமைகளை விற்றே அவர்களில் பலரும் பிழைக்கின்றனர் என்று அறிய வருகின்றது.



இதேவேளை, ஆப்கானிஸ்தானில் 5 சதவீதமான மக்களுக்கு போதுமான உணவே கையிருப்பில் இருக்கிறது என்று செப்ரெம்பர் மாதத்திலேயே எச்சரித்ததாக ஐ. நா. உணவு திட்டம் எச்சரித்துள்ளது. கோதுமை மா, எண்ணெய் என்பவற்றின் விலைகள் பல மடங்கு உணர்ந்துள்ளன.

இதனிடையே, ஆப்கானிஸ்தானில் தண்ணீர் பற்றாக்குறையும் வறட்சியும் அதிகரித்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானில் பட்டினியால் 8 சிறுவர்கள் உயிரிழப்பு!

காபூல், ஒக். 26

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலின் மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் பட்டினியால் இறந்த 8 ஆதரவற்ற ஹசாரா சிறுபான்மை இன சிறுவர்களின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன என்று ஆப்கானிஸ்தானின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஹசாரா இன அரசியல் தலைவருமான முஹமது மொஹாகிக் தெரிவித்துள்ளார்.

காபூலின் 13ஆவது வட்டாரத்தில் உள்ள ஒரு பகுதியில் இந்தச் சிறுவர்கள் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டனர் என்று நேற்றுமுன்தினம் தனது பேஸ்புக்கில் அவர் பதிவிட்டுள்ளார்.

இந்த சிறுவர்களின் உடல்களை அந்தப் பகுதி முஸ்லிம் மத தலைவர் மற்றும் அயலவர்கள் இணைந்து புதைத்தனர் எனவும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறந்த சிறுவர்களில் ஒருவருக்கு அதிகமாக 8 வயது ஏனையவர்கள் அதற்கும் குறைந்த வயதினர். இறந்தவர்களில் 18 மாதங்களே ஆன கைக்குழந்தையும் அடங்கும். இந்த சிறுவர்களின் பெற்றோர்கள் இறந்துவிட்டனர். அவர்களுக்கு நெருங்கிய உறவினர்கள் எவரும் இல்லாத நிலையில், அவர்கள் பரிதாபமாக இறந்தனர். பட்டினியால் அவர்களால் கால்களைகூட நீட்ட முடியவில்லை என்று உள்ளூர் முஸ்லிம் மதத் தலைவர் கூறியுள்ளார்.

இந்த மரணங்கள் குறித்து தலிபான் தரப்பினர் கருத்து எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## சூடானில் இராணுவ சதி; அரச தலைவர்கள் கைது

கார்ட்டூம், ஒக். 26

சூடான் இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் எனப் பலர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அடையாளம் தெரியாத இராணுவத்தினரால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களில் பிரதமர் அப்துல்லா ஹம்டோக்கும் ஒருவர் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து, ஜனநாயக ஆதரவு போராட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். இதனால், தலைநகர் கார்ட்டூமில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நீண்டகாலம் சூடானை ஆட்சி செய்த அல் பஷீர் இரு ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சியிலிருந்து தூக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் இருந்த சிவிலியன் அதிகாரிகளும் இராணுவத்தினரும் முரண்பட்டனர். இதையடுத்தே சதிப்புரட்சி இடம்பெற்றுள்ளது. நேற்று காலை வரை சதியின் பின்னணியில் யார் இருக்கிறார் என்ற விடயம் வெளிவரவில்லை. இராணுவ தரப்பிலிருந்தும் எந்தப் பதிலும் வெளியிடப்படவில்லை.

கூட்டு இராணுவப் படைகளால் கைது செய்யப்பட்டவர்கள் அடையாளம் தெரியாத இடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டின் தகவல் தொடர்புதுறை அமைச்சின் முகநூலில் கூறப்பட்டுள்ளது.

இதேசமயம், அந்த நாட்டில் இணையம் செயலிழந்துள்ளது. தலைநகரம் முழுவதும் இராணுவம், துணை இராணுவ படைகள் நிறுத்தப்பட்டுள்ளன. கார்ட்டூம் சர்வதேச விமான நிலையமும் மூடப்பட்டுள்ளது. (ஐ)



யாசிடி இன பெண் படுகொலை!

## உடந்தையாக செயல்பட்ட ஐ. எஸ். பெண்ணுக்கு சிறை

பெர்லின், ஒக். 26

5 வயது சிறுமியை வெயிலில் கட்டி வைத்து தாகத்தில் தவிக்கவிட்டு கொன்ற கணவருடன் உடனிருந்த குற்றத்திற்காக ஐ. எஸ். அமைப்பில் சேர்ந்து இஸ்லாமியராக மாறிய பெண்ணுக்கு 10 ஆண்டுகள் சிறை விதித்துள்ளது முனீச் நீதிமன்றம்.

ஜெனிபர் வெனிஷ் என்ற ஜேர்மனியரான அந்த பெண்ணும், ஈராக்கை சேர்ந்த ஐ. எஸ். அமைப்பை சேர்ந்தவரான அவரின் கணவரும் 5 வயதே ஆன யாசிடி இனப் பெண்ணை அடிமையாக வாங்கியிருந்தனர். 2015ஆம் ஆண்டு ஈராக்கின் பல்லூஜா நகரில், அவர்கள் வசித்த வீட்டில் அடிமையாக வாங்கிய சிறுமியை வெயிலில் கட்டி வைத்து தாகத்தில் தவிக்க விட்டு கொன்றார் வெனிஷின் கணவர். இந்த சம்பவத்தின் போது வெனிஷும் உடனிருந்தார்.

ஆனால், இந்த குற்றச்சாட்டை வெனிஷ் மறுத்தார். அந்த சிறுமியின் தாய் நோரா ஒரு நம்பத்தகாத சாட்சி என்று அவரின் வழக்கறிஞர்கள் கூறினர். சிறுமி இறந்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை என்று கூறப்பட்டது. எனினும், ஐ. எஸ். அமைப்பின் அடிமைகளாக நோராவும், அவரின் 5 வயது மகளும், மேலும் சில யாசிடி பெண்களும் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்தே வெனிஷுக்கு 10 ஆண்டு சிறை விதிக்கப்பட்டது.

இதேவேளை, வெனிஷின் கணவர் பிராங்போர்ட்டில் விசாரணையில் உள்ளார். அடுத்த மாதம் அவரின் வழக்கில் தீர்ப்பு அளிக்கப்படும் என்று தெரிகிறது.

வடக்கு ஈராக்கை சேர்ந்த குர்திஷ் இனத்தவரான யாசிடி இனம் ஐ. எஸ். அமைப்பின் மிருகத்தனமான இலக்காக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. யாசிடி சமூகத்துக்கு எதிரான ஐ. எஸ். அமைப்பின் குற்றத்துக்கான முதல் வழக்காக இது அமைந்துள்ளது.

சர்வதேச அதிகார வரம்பு கோட்டின்கீழ், வெனிஷ் ஜேர்மனியில் உட்படுத்தப்பட்டார். இது வெளிநாட்டில் நிகழும் இனப்படுகொலை உள்ளிட்ட போர் குற்றங்களுக்கு எதிராக வழக்கு தொடர அனுமதிக்கிறது. வெனிஷும் அவரின் கணவரும் 2016ஆம் ஆண்டு துருக்கியில் கைது செய்யப்பட்டு, ஜேர்மனியிடம் ஒப்படைக்




## ஹொங்கொங் அலுவலகத்தை மூடுகின்றது மன்னிப்பு சபை!

ஹொங்கொங், ஒக். 26

சர்வதேச மன்னிப்பு சபை ஹொங்கொங்கில் உள்ள தனது அலுவலகங்களை மூடுகிறது. அங்கு திணிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு சட்டத்துக்கு எதிராகவே அந்த அமைப்பு இந்த நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

சர்வதேச மன்னிப்பு சபை, ஹொங்கொங்கில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பட்டு வருகிறது. தற்போது அங்கு இரு அலுவலகங்கள் உள்ளன. ஒன்று நகரத்திலும் மற்றையது பிராந்திய அளவிலும் செயல்படுகிறது. எதிர்வரும் 31ஆம் திகதி இந்த அலுவலகங்கள் மூடப்படும். இந்த ஆண்டுக்குள் அங்கிருந்து வெளியேறும்.

சீனாவின் தேசிய பாதுகாப்பு சட்டம், பிரிவினை, அடிமைத்தனம், பயங்கரவாதம் மற்றும் வெளிநாட்டு படைகளுடனான கூட்டு ஆகியவற்றை குற்றமாக்குகிறது. இது ஆட்சியாளர்மீதான அதிருப்தியை நசுக்குவதை நோக்காகக் கொண்டது என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். (ஐ)

# மக்களின் வயிற்றில் அடிப்பது இந்த அரசின் நோக்கம் அல்ல

## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறுகின்றார்



கொழும்பு, ஒக். 26

**"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு, மக்களின் துயர் துடைக்கவே ஆட்சிப்பீடம் ஏறியது. மக்களின் வயிற்றில் அடிப்பது இந்த அரசின் நோக்கம் அல்ல."**

- இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலையில், மக்கள் மீது சுமையை இறக்க வேண்டாம் என நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, பஸ் உரிமையாளர்கள் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா என்ற கேள்விக்கு ஊடகங்களிடம் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாளுக்கு நாள் எரிபொருள் விலை அதிகரிக்குமானால் அது பாரிய பிரச்சினையாக மாறிவிடும். டீசலின் விலையை அதிகரித்தால் பஸ் கட்டணங்களை அதிகரிக்க நேரிடும்.

எரிபொருள் விலையை அதிகரிப்பது அவசியம் என்றாலும் தற்போதைய நிலையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படக்கூடாது.

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டால், பஸ் கட்டணங்கள் தொடர்பான பிரச்னை ஏற்படும். கடந்த காலங்களில் பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டும் என்று பஸ் உரிமையாளர்கள் எம்மிடம் கோரிக்கை விடுத்தனர்.

எனினும், நாட்டின் தற்போதைய நிலையில், மக்கள் மீது சுமையை இறக்க வேண்டாம் என நாம் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர்கள் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவில்லை.

ஒட்டுமொத்த நாட்டு மக்களின் துயர் துடைக்கவே நாம் ஆட்சிப்பீடம் ஏறினோம். மக்களின் வயிற்றில் அடிப்பது எமது நோக்கம் அல்ல. எதிரணியினரின் ஆசைகள் நிறைவேற நாம் ஒருபோதும் இடமளியோம்" - என்றார். (இ)

### பாடசாலைகளில் இருந்து இடைவிலகியோருக்கும் இலவசமாகவே 'பைசர்'

யாழ்ப்பாணம், ஒக். 26

"பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் தங்களுக்குரிய பைசர் தடுப்பூசிகளை சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கு எந்தப் பணமும் செலுத்தத்தேவையில்லை. அவ்வாறு யாராவது பணம் கோரினால் முறைப்பாடு செய்யுங்கள்."

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. வடக்கில் சில இடங்களில் பாடசாலை இடைவிலகிய மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு பணம்கோரிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். (இ - 03)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 36 பேர் கைது!

கொழும்பு, ஒக். 26

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 36 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் நேற்று காலை விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 324 ஆக உயர்வடைந்துள்ளது.

மாகாண எல்லைகளை கடக்கின்றமை தொடர்பில் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் 158 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி மேல் மாகாணத்திலிருந்து வெளியேற மற்றும் உள்நுழைய முற்பட்ட 193 வாகனங்கள் 437 பேருடன் நேற்றுமுன்தின் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. (இ)

## பாடசாலைகளுக்கு அருகில் இனி பொலிஸார் அவசியம் இல்லை!

### அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26

பாடசாலைகளுக்கு அருகில் விசேட பொலிஸ் அதிகாரிகளை இனிமேல் நியமிக்க வேண்டிய அவசியமில்லை என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆசிரியர்கள் முன்னெடுத்து வந்த பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக கடந்த 21 மற்றும் 22ஆம் திகதிகளில் கடமைக்கு சமூகமளித்த ஆசிரியர் குழுவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, அந்த இரண்டு நாள்களிலும் பாடசாலைகளுக்கு அருகாமையில் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இதன்போது, ஆசிரியர் - அதிபர்கள் குழுவினருக்குப் பணிக்கு வர வேண்டாம் என மிரட்டியவர்களுக்குப் பொலிஸார் கடும் எச்சரிக்கை விடுத்திருந்தனர்" - என்றார். (இ)

## பூஸா சிறைச்சாலையில் 21 கைதிகளுக்கு தொற்று

கொழும்பு, ஒக். 26

காலி பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் 21 கைதிகளுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறித்த சிறைச்சாலையில் 30 கைதிகளுக்கு மேற்கொள்ளப் பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 21 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## எஸ்.ரி.எவ். சுற்றிவளைப்பு; 14 பேர் வசமாக சிக்கினர்!

கொழும்பு, ஒக். 26

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 14 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆறு சுற்றிவளைப்புகளில் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் 112 லீற்றர் மதுபானம், 780 லீற்றர் கோடா, இரு செப்புத் தகடுகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இரத்தினபுரி கொடக்கவெல பொலிஸ் பிரிவு, மஹகும்புர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆறு சுற்றிவளைப்புகளில், அனுமதிப்பத்திரமின்றி மாணிக்கக்கல் அகழ்வில் ஈடு பட்ட எழுவர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

மாத்தறை பிட்டபெத்தர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் ரக வாகனத்தில் மணல் ஏற்றிக்கொண்டிருந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிட்டபெத்தர பிரதேசத்தை சேர்ந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (இ)

## 150 அதிகாரிகள் இணைந்து கைதிகள்மீது வெறியாட்டம்

### வெலிக்கடை சிறையில் கலவரம் வெடிக்க இதுவே காரணம் என்கிறார் சுதேஸ் நந்திமால்



கொழும்பு, ஒக். 26

"வெலிக்கடை சிறைச்சாலையின் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கைதிகளை 150 இற்கும் அதிகமான சிறைச்சாலை அதிகாரிகள் இணைந்து தாக்க முற்பட்டுள்ளனர். இதையடுத்தே அங்கு கைதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் கலவரம் வெடித்துள்ளது. இதுதான் உண்மை. அங்கு கைதிகளுக்கிடையில் மோதல் இடம் பெறவில்லை."

- இவ்வாறு சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் செயலாளர் சுதேஸ் நந்திமால் சில்வா தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலை கைதிகளைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்த ஒரு மாத காலமாக வெலிக்கடை சிறைச்சாலையின் கைதிகள் தமது உரிமையை பெற்றுத்தருமாறு கோரி கூரைகளில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொலைக் குற்றச்சாட்டுக்களுக்குள்ளான கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்வதான கருத்தையே சிறைச்சாலைகள் ஆணையாளர் உள்ளிட்ட தரப்பினர் முன்வைக்கின்றனர்.

ஆனால், அது உண்மைக்குப் புறம்பான கருத்தாகும். ஏனெனில் அந்தக் கைதிகளின் கோரிக்கையாக அமைவது அவர்களுக்கு உரிய பொதுமன்னிப்பை வழங்குதலே ஆகும்.

துமிந்த சில்வாவை விடுதலை செய்ய முடியுமாயின் இவர்களையும் விடுதலை செய்ய முடியும்.

13 வருடங்களுக்கும் மேலாக சிறைவாசம் அனுபவித்து வருகின்ற இந்தக் கைதிகளுக்கு அரசு தொடர்ச்சியாக பொய்யான வாக்குறுதிகளையே வழங்கியுள்ளது.

இந்நிலையில், கைதிகள் கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தருணத்தில் 150 அதிகாரிகள் அவர்களைத் தாக்க முற்பட்டுள்ளனர்.

அதேபோல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் கைதிகளுக்கு உணவு வழங்கிய கைதிகளை சிறை அதிகாரிகள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

இது சட்டத்துக்கு முரணான செயற்பாடாகும். ஏனெனில் ஆர்ப்பாட்டம் செய்யும் உரிமை அனைத்துத் தரப்பினருக்கும் உள்ளது" - என்றார். (இ)

# எனது கொடும்பாவிகளை எரித்தாலும் அஞ்சமாட்டேன்

## விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 26

"எனது கொடும்பாவிகளை எரித்தாலும் அஞ்சமாட்டேன். ஒருபோதும் பின்வாங்க போவதும் இல்லை."

- இவ்வாறு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடெங்கும் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது:-

"நாட்டின் எதிர்காலம், மக்களின் நலன்கருதியே இரசாயன உரப் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது. பசுமை விவசாயத்துக்கான அடித்தளம் தற்போது இடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மீண்டும் இரசாயன உரம் கோருவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. நாம் எமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளமாட்டோம்.

எனது கொடும்பாவிகளை எரிக்கட்டும். இதற்கெல்லாம் அஞ்சி பின்வாங்கத் தயாரில்லை" - என்றார். (இ)

## மூன்று விபத்துக்களில் மூவர் மரணம்!

கொழும்பு, ஒக். 26

மூன்று இடங்களில் இடம் பெற்ற மூன்று விபத்துக்களில் மூவர் மரணமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைவாக அநுராதபுரம், இபலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலன்வெள வீதியில், மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு குடைசாய்ந்துள்ளதுடன் அருகிலிருந்த மின்சாரத் தூணின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர், கல்வெள வைத்தியசாலையில் சேர்க்கப்படும் போது மரணமடைந்தார். கலகம்பருவ பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயது இளைஞரே உயிரிழந்தார்.

குருநாகல், குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவு, மாதம்பே வீதி, பல்லேவெல பிரதேசத்தில், மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி பாதசாரி ஒருவர் மீதும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், இரு மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களும் பாதசாரியும் காயமடைந்த நிலையில் குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்களில் ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்படும் போது சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். குளியாப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயது முதியவரே உயிரிழந்தார்.

குருநாகல் - கிரிஉல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருநாகல் வீதி, தம்பதெனிய பகுதியில், குருநாகல் நோக்கி பயணித்த பஸ்ஸூடன் மோதுண்டு பெண்ணொருவர் மரணமடைந்தார்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் தம்பதெனிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது உயிரிழந்தார். குறித்த பெண்ணின் விபரங்கள் தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## 600 மரக்கன்றுகள் நாட்டிவைப்பு

வவுனியா, ஒக் .26

மாருதம் பசுமை இயக்கத்தின் 6ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாருதம் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று 600 மரக்கன்றுகள் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத்சந்திர, வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் நே.விஷ்ணுதாசன், வவுனியா பல்கலைக்கழகத்தின் மருத்துவர் ப. சத்தியலிங்கம், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தவிசாளர் யோகராசா, மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், பல்கலைக்கழக வளவாளர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## திருடன் கைது!

கொழும்பு, ஒக.26

இரவு வேளைகளில் காரில் சென்று, வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர், மொறட்டுவையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மொரட்டுவ - கொரலவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். இதற்கமைய, குறித்த சந்தேகநபரால் மொறட்டுவை பிரதேசத்தில் 5 வீடுகளும், கல்கிஸ்ஸ பிரதேசத்தில் ஒரு வீடும் உடைக்கப்பட்டு தங்க நகைகள், வெளிநாட்டு நாணயங்கள், மதுபானம் உள்ளிட்டவை திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 19 - 02 - 1938



இறப்பு 22 - 10 - 2021

### கார்த்திகேசு யோகராஜா

அச்சுவேலி தம்பாலை சந்நிதி றோட்டைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு யோகராஜா அவர்கள் 22.10.2021 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், கருணாகரன்(சுவிஸ்), சுமதி (கனடா), இலட்சுமிகரன் (சுவிஸ்), சிவாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,வாணிதேவி(சுவிஸ்), வரேந்திரன்(கனடா), பாரதி (சுவிஸ்), சர்மிளா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், கலாநிதி சித்திரவடிவேல், பரம்சோதி (பவா), தவம், பாலசுப்பிரமணியம்(காந்தி) மற்றும் ஆறுமுகநாதன் (கட்டி- இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,சாரூஜா, யாதவ், பாகேசன், தினேசன், காரூண்யா, யோசஸ், திவ்யா, ஹர்ஷிதா, கைலேஷ், அக்ஷே ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

*பார்வைக்கு*
Wednesday, 27 Oct 2021 6:00 PM - 9:00 PM
Thursday, 28 Oct 2021 10:00 AM - 10:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

*கிரியை*
Thursday, 28 Oct 2021 10:30 AM - 12:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre Chapel Ridge

*தகனம்*
Thursday, 28 Oct 2021 12:30 PM - 1:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சிவாகரன்(சிவா - மகன்)**
+14165660379

*தகவல்:*
**குடும்பத்தினர்.**



## மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 03 - 1943



இறப்பு 18 - 10 - 2021

### திருமதி பத்மநாதன் தவமணிதேவி
*(சின்னமணி)*

நல்லூர் வடக்கு, விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், இந்தியா சென்னை 117 ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் தவமணிதேவி அவர்கள் 18.10.2021 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு - பவளம் தம்பதியரின் அன்பு மருமகளும்,பத்மநாதன்(சிவம்) அவர்களின் அன்பு மனைவியும்,தவநாதன்(ரகு- சுவிஸ்), தயாகரன்(வவி), தத்ரூபன்(ரூபன்- ஜேர்மனி), தத்ரூபினி(ரூபி- ஜேர்மனி), சத்தியபாலினி(சக்தி- இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,கனகரத்தினம், தங்கமலர், அன்னலிங்கம், துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்றவர்களான சோமலிங்கம்- பவளம் தம்பதியரின் மைத்துனியும்,கௌரி(சுவிஸ்), செபஸ்ரியானோ (ஜேர்மனி), ரூபினி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தயாரஞ்சன்(மிகைல்), சஞ்சய், மதியழகி, தமிழிசை ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும்,சோபி(பபி) அவர்களின் அம்மம்மாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (26.10.2021) செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 09: 45 மணிமுதல் மு.ப 11:30 மணிவரை நடைபெற்று பின்னர் ந.ப 12:05 மணியளவில் புழுதிவாக்கம், சென்னை மின் தகன மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*வீட்டு முகவரி: இல. 03,*
*வேல்முருகன் காலணி,*
*சென்னை -117,*
*தமிழ்நாடு, இந்தியா.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**ரூபன் - மகன்** Mobile : +4917623315807

# தொற்று குறைந்தமைக்கு தடுப்பூசிகளே காரணம்!

## தேசிய மருத்துவமனை மருத்துவர்

கொழும்பு, ஒக். 26

"நாட்டில் பெருமளவானோருக்கு தடுப்பூசி வழங்கப்பட்டமையால், சமூகத்தில் விரைவாக தொற்றை காவக்கூடியோர் எண்ணிக்கை குறை வடைந்துள்ளது. தற்போது கோவிட் - 19 தொற்றுக்கு உள்ளாவோர் எண்ணிக்கை சடுதியாக குறை வடைந்து வருகின்றமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணி", என்று கொழும்பு தேசிய மருத்துவமனை யின் விசேட மருத்துவர் உபுல் திஸ நாயக்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத் தில் நேற்று திங்கட்கிழமை நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் இத னைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கோவிட் தொற்று பரவல் தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் கொழும்பு தேசிய வைத்தியசாலை யில் சுமார் 700 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வந்தனர். அதே வேளை 200 - 250 தொற்றாளர்கள் ஒட்சிசன் தேவையுடையோராகக் காணப்பட்டனர். ஆனால், இன்று சுமார் 30 கோவிட் தொற்றாளர்களே காணப்படுகின்றனர்.

அதிதீவிர சிகிச்சை பிரிவில் 7 பேர் மாத்திரமே சிகிச்சை பெற்று வருகின்றனர். கோவிட் அபாயம் கடந்த மாதங்களைவிட சாதகமான முறையில் குறைவடைந்துள்ளது. நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சிறந்த தடுப்பூசி வழங்கும் திட்டம் இதற்கான பிரதான காரணிகளில் ஒன்றாகும்.

எவ்வாறிருப்பினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மீண்டும் கோவிட் பரவல் ஏற்பட வாய்ப்புள்ளது. மக்கள் அதிகளவில் ஒன்று கூடக் கூடிய திருமண நிகழ்வுகள், மரண சடங்குகள், ஆலய உற்சவங்கள் உள்ளிட்டவை ஒரே நேரத்தில் அதிகளவானோருக்கு தொற்றை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

எனவே இவ்வாறான விடயங்க ளில் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி அவதானத்துடன் செயற் பட வேண்டியது அத்தியாவசிய மானதாகும் - என்றார். (ஐ)

# போரால் பாதிக்கப்பட்ட 80 பேருக்கு இழப்பீடுகள்!

மன்னார், ஒக். 15

நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக ஏற்பட்ட சொத்துக்கள் அழிப்புக்குள்ளானவர் ளுக்கு இழப்பீட்டு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்னதினம் இடம்பெற்றது.

யுத்தம் காரணமாக சொத்தழிவு, கடும் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கான கொடுப்பனவு, வணக்கஸ்தல அழிவுகளுக்கான கொடுப்பனவு ஆகியவற்றுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு நீதி அமைச்சின் இழப்பீட்டு அலுவலகத்தால் நெறிப்படுத்தப்படும் குறித்த இழப்பீடு வழங்கும் நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 80 பயனாளிகளுக்கு குறித்த இழப்பீட்டு காசோலை வழங்கி வைக்கப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கி வைத்தார். (ஐ)

# இலங்கை வானொலியில் சாயி பஜனை!

கொழும்பு, ஒக். 26,

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, சாயி சமித்திகளில் பக்தர்களை அழைத்து, சாயி பஜன் செய்து கொள்ளமுடியாத நிலையுள்ளது. அரசு சுகாதாரக் கட்டுப்பாட்டுக்கு அமைவாக, பக்தர்களும் கலந்துகொள்ள முடிவதில்லை.

இதனால் சாயிசேவையாக, கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம், மகான் சீரடி சாயி மந்தீர் சமஸ் தானம் அதரவில், இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தின், தமிழ் தேசிய சேவையில், எதிர்வரும் 28ம் திகதி வியாழக்கிழமை, 102.1 மற்றும் 102.3 அலைவரிசைகளில், தினமும் மாலை 6.15 தொடக்கம் 6.30 வரை சாயி பஜன் நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் பிரசித்தி பெற்ற, கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலைய சாயி பஜன் குழுவினரின் ஏற் பாட்டில் நடைபெறும்.

## நாடளாவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மலையகத்தில் நுவரெலியா, ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவை, கினிகத் தேனை, கொட்டகலை, தலவாக்கலை, அக்கரபத்தனை, டயகம, வலப்பனை, இராகலை போன்ற பகுதிகளிலும் ஆசிரி யர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள் சுலோ கங்களை ஏந்தி கோஷமிட்டு தமது போராட்டத்தை முன்னெ டுத்தனர்.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத் தும், 24வருட காலமாக நிலவிவரும் அதிபர்-ஆசிரியர்களின் சம்பள பிரச்னை உள்ளிட்ட ஏனைய பிரச்னைகளுக்கு உடனடியாக தீர்வை பெற்றுதருமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டது.

அதன்படி, இலங்கையின் ஆசிரியர் சமூகம் முன்வைக்கும் கோரிக்கைகள் மற்றும்

ஒட்டுமொத்த ஆசிரியர் சமூகத்தின் கௌரவத்தையும், முன்னேற்றத்தையும் பாதுகாக்க இந்த நாட்டின் அதிகாரி களை உன்னிப்பாகக் கவனிக்குமாறு நாங்கள் கடுமையாக வலியுறுத்துகி றோம் எனவும் 1997மற்றும் 2006ஆகிய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத்திட்டத்தை அமுல்படுத்தப் படாமையை கண்டித்தும் அதிபர், ஆசிரியர் சட்டத்திட்டங்களுக்கு புறம் பாக புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங் கப்பட்டமை, உட்கட்டமைப்பு வசதிகள் மேற் கொள்ளப்படாமை, கோவிட் 19 குறித்து முழுமையான வசதிகள் பாட சாலைகளுக்கு செய்துக்கொடுக்கப் படாமை உள்ளிட்ட பல்வேறு பிரச் னைகளை முன்னிலைப்படுத்தியும் எதிர்ப்பு தெரிவித்து அவர்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**கிளிநொச்சி**

பளை கல்விக் கோட்ட அலுவலகம் முன்பாக ஆசிரியர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். இந்த போராட்டம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்றது.

**மட்டக்களப்பு**

சம்பள முரண்பாட்டை நீக்குதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று மட்டக்களப்பிலும் ஆசிரியர்கள் போராட்டத்தை முன்னெ டுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், ஆசிரியர் அதி பர்களின் தொழிற்சங்கம் உட்பட பல் வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தன.

மட்டக்களப்பு காந்திபூங்காவில் ஒன்றுகூடிய ஆசிரியர்கள், அதிபர்கள் ஊர்வலமாக சென்று மட்டக்களப்பு மணிக்கூண்டு கோபுரத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**திருகோணமலை**

கிழக்கு மாகாண இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தினர் ஏற்பாடு செய்தி ருந்த ஆர்ப்பாட்டம் திருகோணமலை யில் இடம் பெற்றது.

நேற்று பிற்பகல் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்துக்கு முன்பாக அதிபர் -

ஆசிரியர்கள் இணைந்து இந்த ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கல்விக்காக 6 வீத நிதியினை ஒதுக்கீடு செய், கொத்த லாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்ட மூலத்தை கிழித்தெறி, ஆசிரியர் அதிபர் சம்பள பிரச்னைக்கு உடனடி யாக தீர்வினை வழங்கு, மற்றும் பிள்ளை களின் கல்வி உரிமையை உறுதிப்படுத்து என பதாதைகளை ஏந்திய வண்ணம் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

**யாழ்ப்பாணம்**

அதிபர், ஆசிரியர்கள் ஆறு கோரிக்கையை முன்வைத்து நேற்று வட மராட்சியில் கண்டன ஆர்ப்பாட்ட மொன்றை முன்னெடுத்தனர்.

அதிபர் ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கொழும்பு கோட்டையில் முன்னெடுத்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தே பிற்பகல் 1.45 மணியளவில் வடமராட்சி

உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு முன் னால் ஒன்று கூடிய அதிபர் - ஆசிரியர் கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற் கொண்டனர்.

சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காணப்பட வேண்டும், இலவசக்கல் வியை பறிக்காதே, கல்விக்காக ஆறு வீத ஒதுக்கீடு வேண்டும், இலவசக்கல்வி பாதுகாக்கப்படவேண்டும், கல்வி இராணுவமயப்படுத்துவதை நீக்க வேண்டும் உட்பட பல கோசங்களை

எழுப்பியதுடன் சுலோக அட்டை களையும் தாங்கி இருந்தனர். (அ)

## 55% மாணவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை பதிவானது. எனினும், இன்றையதினம் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்களின் எண் ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது என்றும் பணிப்பாளர் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை, பாடசாலை மாண வர்கள் சீருடை அணிவது கட்டாயமல்ல என்றும், பொருத்தமான ஆடைகளை அணிய முடியும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக் கது. (ஐ-03)

## அருட்தந்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகளை பேணவில்லை என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த குற்றச்சாட்டு தொடர்பில் சம்பந்தப் பட்ட தரப்பின ருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை எடுக்குமாறும் அவர் முறைப்பாட்டில் கோரியுள்ளார். (ஐ)

## சடுதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களும் அடங்குகின்றனர்.

இதில் 60 வயதுக்கு மேற்பட்டோரில் 22 பேரும், 30 - 59 வயதுக்கு இடைப் பட்டோரில் 6 பேரும், 30 வயதுக்குட் பட்டவர்களில் ஒருவரும் மரணித்துள் ளனர்.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றால் மரணித்தவர் களின் மொத்த எண் ணிக்கை 13 ஆயி ரத்து 640 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## 2022...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று இடம்பெற்ற லங்கா கியூஆர் வலையமைப்பை அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

டிஜிற்றல் பணம் அல்லது தேசிய அடையாள அட்டை அல்லது இவை அனைத்துக்கும் முன்னர், பணத்தை பயன்படுத்தாத பொருளாதாரத்தை நோக்கிச் செல்ல தேவையான சூழலை உருவாக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்த வசதிகள் இருந்தாலும், நாட்டு மக்கள் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தவில்லை எனின் முயற்சிகள் பலனளிக்காது என்று அவர் கூறினார்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர். இதன்படி, யாழ். போதனா மருத்துவமனையில் 05 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனை யில் ஒருவர், சங்கானை பிரதேச மருத் துவமனையில் ஒருவர் என யாழ்ப்பா ணம் மாவட்டத்தில் 8 தொற்றாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், மல்லாவி ஆதார மருத்துவமனையில் ஒருவர், மாவட்ட பொது மருத்துவ மனையில் ஒருவர், முல்லைத்தீவு விமானப் படை முகாமில் ஒருவர் என மூவருக்கு தொற்று உறுதிப்படுத் தப்பட்டது.

தவிர, கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவருக்கும் வவு னியா மாவட்ட பொது மருத்துவ மனையில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

## அதானி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள், நேற்று மன்னாருக்கும் வந்தனர். இங்கு அவர் கள் மன்னார் காற்றாலை மின் நிலை யத்தை பார்வையிட்டனர். கொழும்பு துறைமுக அபிவிருத்தியை பெற்றுள்ள அதானிகுழுமம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி தொடர்பான திட்டம் ஒன்றையும் நாட்டில் ஆரம்பிக்கத் திட்ட மிட்டுள்ளது. இந்த நிலையிலேயே அவர் கள் மன்னாருக்கு சென்றனர்.

மன்னார் காற்றாலை நிறுவனம் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மிகப்பெரிய காற்றாலை மின்நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் கோடீஸ்வரர்கள் பட்டி யலில் இரண்டாவது இடத்திலிருக்கும் கௌதம் அதானி, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் நெருக்கமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருமண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் அதிக பட்சமாக 75 பேர் மட்டுமே உணவருந்த அனுமதிக்கப்படு கிறார்கள். மேலும் வெளிப்புற நிகழ்வு களில் கலந்துகொள்ளக் கூடியவர்களின் அதிகபட்ச எண்ணிக்கை 100 ஆக அதி கரிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநாட்டு மண்ட பத்தின் 1/3 இடத்தில் அலுவலகக் கலந்துரையா டல்கள் மற்றும் மாநாடுகளுக்கு அனு மதிக்கப்படுகிறது. அதிகபட்சம் 150 பேரே கலந்துகொள்ள முடியும் என அறி விக்கப்பட்டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu



# கோலியின் குணத்தை பாராட்டும் ரசிகர்கள்!

சென்னை, ஒக். 26

பாகிஸ்தானின் பாபர் அசாம், முகமது ரிஸ்வான் ஆகியோருக்கு இந்திய அணித் தலைவர் விராட் கோலி வாழ்த்து கூறிய ஒளிப்படங்கள் வலைதளங்களில் வைரலாகின.

டுபாயில் நேற்று முன்தினம் இரவு நடந்த இருபது - 20 உலகக் கிண்த் தொடரின் சுப்பர்-12 சுற்றில் 10 விக்கெட்களால் இந்திய அணியை பாகிஸ்தான் வெற்றி கொண்டது. இதன்மூலம், உலகக் கிண்ணத் தொடரில் முதன்முறையாக பாகிஸ்தான் அணி இந்திய அணியை வெற்றி கொண்டது.

இந்த நிலையில் போட்டி முடிந்ததும் இந்திய அணித் தலைவர் கோலி, பாகிஸ்தான் வீரர்களான முகமது ரிஸ்வான் மற்றும் பாபர் அசாமை கட்டியணைத்து வாழ்த்துகள் தெரிவித்த ஒளிப்படம் இணையங்களில் வைரலாகின. அத்துடன், கோலியின் விளையாட்டுக்கே உரித்தான கனவான் தன்மையையும் பாராட்டினர்.

மேலும், இந்தியா - பாகிஸ்தான் போட்டிகள் வெறுப்பை அழித்து அன்புக்கு வழிவகுத்துள்ளன என ரசிகர்கள் பலரும் அந்தப் ஒளிப்படங்களை பதிவிட்டு மகிழ்ந்தனர்.

போட்டி முடிந்ததும் இந்திய அணி வீரர்கள் மற்றும் பாகிஸ்தான் வீரர்கள் ஒன்றாக நின்று பேசும் புகைப் படங்களும் வைரலாகின. (ஐ)

# முஜீப்பின் சுழல் ஜாலத்தால் ஆப்கான் அணி பெருவெற்றி!

சார்ஜா, ஒக். 26

முஜிப் உர் ரஹ்மானின் சுழல் ஜாலத்தால் ஆரம்ப வரிசையை முழுமையாக இழந்த ஸ்கொட்லாந்து 130 ஓட்டங்களால் ஆப்கானிஸ்தான் அணியிடம் படு தோல்வியடைந்தது.



உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர் 12 சுற்றில் நேற்றிரவு சார்ஜாவில் நடந்த போட்டியில் ஆப்கானிஸ்தான் - ஸ்கொட்லாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணிக்கு தொடக்கம் கொடுத்த ஹஷ்ரதுல்லா ஷஷாய் - முஹமட் சாஹ்ஷாட் இணை சிறப்பான அடித்தளத்தை ஏற்படுத்தியது. பவர்பிளே முடிவில் சாஹ்ஷாட் 2 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 22 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரஹ்மதுல்லா குர்பாஷ், ஷஷாயுடன் இணைந்து ஆடினார். 3 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளை விளாசி 30 பந்துகளில் 44 ஓட்டங்களை குவித்த ஷஷாய் 44 ஓட்டங்களுடன், ஆட்டமிழக்கவே அடுத்து வந்தார் நஜிபுல்லா ஷட்ரன்.

இதனிடையே குர்பாஷ் 4 சிக்ஸர்களை விளாசியதுடன் ஒரு பௌண்ட்ரியும் அடித்து 46 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார். ஷட்ரன் அதிரடியாக ஆடி அரைச் சதம் கடந்து இறுதிப் பந்தில் ஆட்டமிழந்தார். அவர் 5 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 59 ஓட்டங்களை குவித்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்களை மட்டுமே இழந்த ஆப்கானிஸ்தான் 190 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கொட்லாந்தின் பந்துவீச்சில் சபியான் ஷரீப் 2 விக்கெட்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்துக்கு தொடக்கம் கொடுத்த ஜோர்ஜ் முன்செய், கெய்ல் கோட்சர் ஆகியோர் பொறுமையாக ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

மூன்றாவது ஓவரை வீசிய முஜீப் உர் ரஹ்மானின் சுழல் ஜாலத்தில் அந்த ஓவரிலேயே அணித் தலைவர் கோட்சர் உட்பட மூன்று வீரர்களின் விக்கெட்கள் சாய்க்கப்பட்டன.

பின்னர் வந்த வீரர்களில் கிறிஸ் கிரேவ்ஸ் மட்டுமே இரு வரிசை இலக்க ஓட்டத்தை தொட்டார். அவர் 12 ஓட்டங்களை எடுத்திருந்தார். வேறு எந்த வீரர்களும் ஆப்கான் வீரர்களின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினர்.

இதனால், 10.2 ஓவர்களிலேயே சகல விக்கெட்களையும் இழந்த ஸ்கொட்லாந்து 60 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

5 வீரர்கள் எந்த ஓர் ஓட்டத்தையும் பெறாமலேயே ஆட்டமிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானின் பந்துவீச்சில் முஜீப் உர் ரஹ்மான் 5 விக்கெட்களையும், ரசீத் கான் 4 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனா முஜீப் உர் ரஹ்மான் தெரிவானார். (ஐ)




# அஹமதாபாத், லக்னோ பெயரில் புதிய அணிகள்!

## ஐ. பி. எல். நிர்வாகம் அறிவிப்பு

டுபாய், ஒக். 26

இந்தியாவின் அஹமதாபாத், லக்னோ நகரங்களை சொந்த தளமாகக் கொண்டு இரு புதிய ஐ. பி. எல். அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அணி உரிமையைக் கைப்பற்றுவதற்காக நேற்று நடந்த ஏலத்தில் 10 நிறுவனங்கள் களத்தில் இறங்கின. ஏலதாரர்கள், அஹமதாபாத், லக்னோ, கட்டாக், தர்மசாலா, குவஹாத்தி, இந்தூர் என ஆறு நகரங்களை மையப்படுத்தி ஏலம் எடுக்கமுடியும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், நேற்று திங்கட் கிழமை டுபாய் தாஜ் ஹோட்டலில் அணிகளுக்கான ஏலம் ஆரம்பமானது. இதில் அனைத்து தரப்பினரும் இரு விண்ணப்பங்களை வழங்குமாறு கேட்கப்பட்டது. இதற்கமைய நடந்த ஏலத்தின் அடிப்படையில் லக்னோ நகரத்தை மையமாகக் கொண்ட அணி உரிமையை இந்தியாவின் ஆர். பி. எஸ். ஜி. குழுமம் 7ஆயிரத்து 90 கோடி இந்திய ரூபாய்க்கு ஏலம் எடுத்தது.

இதேபோன்று, அஹமதாபாத் நகரை மையமாகக் கொண்ட அணி உரிமையை சி. வி. சி. கப்பிற்றல் நிறுவனம் 5 ஆயிரத்து 166 கோடி இந்திய ரூபாய்க்கும் ஏலம் எடுத்தன. (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - அம்பிகாபதி,மொட்டசிவா கெட்ட சிவா திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

---

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
06.00 மணி : இயேசுவின் போதனைகள்
07.30 மணி : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

---

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு